திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு :

உ

சிவசிவ

செந்திலாண்டவன் துணை

## ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்

அருளிச் செய்த

## திருச்செந்தூர்

# கந்தர் கலிவெண்பா

[சகலகலா வல்லி மாலை-உரை-ஆங்கிலம்-இந்தி]

மூலமும் உரையும்

★

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்**

அவர்களுடைய திருவுளப்பாங்கின்வண்ணம்

★

ஸ்ரீ காசிமடம் இளவரசு

**ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

அவர்களால் வெளியிடப்பெற்றது

★

*உரையாசிரியர் :*

*திருமுறைக் கலைஞர்*

**வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்**

*திருச்சிராப்பள்ளி.*

ஸ்ரீ காசிமடம்] 1957 [திருப்பனந்தாள்

முதற் பதிப்பு: 1949
இரண்டாம் பதிப்பு: 1957

உ
சிவ சிவ

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவிய தருமங்கள்

| | | | முதற் பொருள் ரூபா |
|---|---|---|---|
| 1. | திருமுறை வளர்ச்சிக்கு ஆக 27 தருமங்கள் | ... | 4,06,000 |
| 2. | கல்வி அபிவிருத்திக்கு ஆக 48 தருமங்கள் | ... | 6,04,200 |
| 3. | சைவசித்தாந்தம் பரப்ப 7 தருமங்கள் | ... | 1,56,000 |
| 4. | அன்னதானம் செய்ய 98 தருமங்கள் | ... | 23,69,000 |
| 5. | வைத்தியம் செய்ய 5 தருமங்கள் | ... | 1,22,500 |
| 6. | பொது தருமங்கள் - ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப் பரிசு, கல்லெழுத்து முதலிய 54 தருமங்கள் | ... | 5,05,745 |
| | ஆகத் தருமங்கள் 239-க்கு | ரூ. | 41,63,445 |

### பிழை திருத்தம்

| | | | |
|---|---|---|---|
| 33-ஆம் பக்கம் | 27-ஆம் வரி | ஆய் - ஆய் | ஆய் - |
| 37 ,, | 13-ஆம் வரி | புகுதற்கரிய | புகுதற்குரிய |
| 39 ,, | 3-ஆம் வரி | 16-ஆம் | 16-ஆம் பாடலடி |
| 40 ,, | 25-ஆம் வரி | தவர்க்கு | தருவர்க்கு |
| 41 ,, | 13-ஆம் வரி | வேதனை | தேவனை |
| 42 ,, | 17-ஆம் வரி | சிறப்புற்றுனே | சிறப்புற்றேனே |

உ
சிவமயம்

# முன்னுரை

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

— கந்தர் அநுபூதி

'சைவ சமயமே சமயம்' எனவும், 'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை' எனவும் ஆன்றோர் புகழ்ந்து போற்றும் சைவ மரபிலே வந்த ஒவ்வொருவரும் சைவ சமய வொழுக்கத்தினின்றும் பிறழாமல் இறை வழிபாட்டில் நாளும் உறைந்து நிற்றல் வேண்டும். இறை வழிபாட்டில் மனம் எளிதில் பண்பட்டு அவனது அருளைப் பெறச் சிவானுபூதிச் செல்வர்கள் அருளிய புகழ்மாலைகள் பல உள. அவற்றுள் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அருளிய சித்தாந்தக் கருவூலமாகிய **திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா** என்னும் நூலும் சிறந்த ஒன்றாகும். இந்நூல் திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளிய முருகப் பெருமானைக் கலிவெண்பா என்னும் பாடலால் புகழ்ந்து கூறுவது; சைவ சித்தாந்த நுட்பங்களை விளக்கியுணர்த்துவது; சொற்சுவை, பொருட்சுவை, பத்திச்சுவை ஒருங்கே அமைந்து அன்பர் மனத்தைத் திருவருள் நெறியிலே செலுத்துவிக்கும் இயல்பினது; **குட்டிக் கந்தபுராணம்** எனச் சிறப்பிக்கப் பெறுவது.

இந்நூலுக்குப் பல பெரியோர்கள் குறிப்புரை முதலியன எழுதியிருப்பினும் அவை கற்றோர்க்கே மிகப் பயன்படுவன ஆகும். மற்றையோரும் எளிதில் பொருளுணர்ந்து நாடோறும் பாராயணம் செய்து முருகப் பெருமானின் திருவருளைப்பெற வேண்டுமென்ற கனிந்த அருள்நோக்கத்தால் இந்நூல் பதவுரை விளக்கவுரை முதலியவற்றோடு **ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்**

269-ஆம் ஆண்டு நினைவு மலராகத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இரண்டாம் பதிப்பு வெளியீடாக வெளிவருகின்றது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இதுவரை சைவசமயத்திற்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஏனைய பொது நலங்களுக்கும் வழங்கிய அருட்கொடை சுமார் 42 லட்சம் ரூபாய்களுக்குமேல் என்பதைத் தமிழுலகம் நன்கறியும். இன்னும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் பிற அறங்களுக்காக நாளும் அளவற்ற பொருளை வழங்கிவருகின்றார்கள். இச் சிறு வெளியீட்டுடன் சகலகலா வல்லி மாலை - உரை - ஆங்கிலம் - இந்தி இவற்றையும் சேர்த்து வெளியிட்டு வழங்க ஆணை தந்தருளியது சைவ மக்கள் போற்றிப் பாராட்டற்குரியதாகும். அவர்களின் அருட்கொடை என்றும் சிறந்தோங்கித் திகழ்வதாக.

அடியவன் 1949-ஆம் ஆண்டில் உரை முதலியன எழுதிய முதற்பதிப்பாக வெளியிட்ட காலத்தும், இரண்டாம் பதிப்பாக வெளிவருங் காலத்தும் இந்நூல் நன்முறையில் அமைய ஆகும் பணிகளைப் புரிந்த திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸிபால், சிவநெறிச் செல்வர் வித்துவான் திரு. K. M. வேங்கடராமையா, M.A., B.O.L., அவர்களுக்கு எனது அன்பு நிறைந்த நன்றி என்றும் உரியதாகும்.

செந்திலாண்டவன் திருவருளைப் பெறுதற்கு அமைந்த இந்நூலை உரையுடன் இரண்டாம் பதிப்பாக வெளியிடுதற்குத் திருவுளம் பாலித்தருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி மௌனமடம் கட்டளை விசாரணையில் இருந்தகாலத்து அடியவனுக்கு இந்நூலுக்கு உரை எழுத ஊக்கம் முதலியன அளித்து ஆவன செய்தவர்களும், இப்பொழுது ஸ்ரீ காசிமடத்து இளவரசு சுவாமிகளாக இருப்பவர்களுமான ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும் அடியவனது அன்புகலந்த நன்றியும் வணக்கமும் என்றும் உரியனவாகும்.

திருச்சிராப்பள்ளி
16—5—1957

இங்ஙனம்
தி. பட்டுச்சாமி ஓதுவார்

# ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் வரலாறு

'**பாண்டி நாடே பழம்பதி**' எனப் புகழ்ப்பெற்ற தென் பாண்டி நாட்டில் ஸ்ரீ வைகுண்டத்தின் வடபாலுள்ள ஸ்ரீ கைலாசத்தில் சைவ வேளாளர் மரபில் **ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள்** அவதரித்தார்; ஐந்தாண்டு வரையில் பேசாமல் ஊமைபோல் இருந்தார். பின்பு திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவருளால் பேசும் ஆற்றலும், கல்வியும், பாடும் திறமையுங்கொண்டு அப்பெருமானைக் குறித்து '**கந்தர் கலிவெண்பா**' பாடி அருள் பெற்றார். மதுரை அடைந்து மீனாட்சியம்மைமீது '**பிள்ளைத் தமிழ்**' பாடி அம்மையால் முத்தாரம் அணியப்பெற்றார். திருமலைநாயக்க மன்னன் விருப்பத்திற்கு இணங்க '**நீதிநெறி விளக்கம்**' என்னும் நூலை அருளினார். தருமை சென்று ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டுப் '**பண்டார மும்மணிக் கோவை**' பகர்ந்தார். ஆரூர், வேளூர், தில்லை அடைந்து தரிசித்து **மாலை, பிள்ளைத்தமிழ், கோவை** முதலியன பாடினார். அதன்பின்னர், காசி சென்று விசுவநாதரைத் தரிசித்துக் **காசிக்கலம்பகம்**அருளினார். '**சகலகலாவல்லிமாலை**' பாடி, சிங்கத்தின்மீதேறிச் சென்று, முகலாய மன்னனைக் கண்டு அவன் உதவியால் கேதாரமந்திரம், கேதாரத்துறை, அறச்சாலை (குமாரசாமி மடம்) முதலியன அமைத்தார். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியோர்க்கு வித்தியா குருவாகத் திகழ்ந்தார்.

ஸ்ரீ சுவாமிகள் அவர்கள் காசியில் தம் மடாலயத்தில் புராணசாலை ஒன்று ஏற்படுத்தி அங்கே இந்தியிலும் தமிழிலும் புராணப் பிரசங்கங்களும், சைவ சித்தாந்தப் பிரசங்கங்களும் செய்து சைவ சமயத்தைப் பரப்பிவந்தார்கள்; தம் (கி. பி 1625—1688) அறுபத்து மூன்றாம் ஆண்டில் வைகாசித் திங்கள் கிருஷ்ணபட்சத்துத் திருதிகையில் இறைவன் திருவடி நிழலில் கலந்தருளினார்கள். செயற்கரிய செயல்கள் பல புரிந்த ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் நினைவு உலகுக்குச் சிவநெறி காட்டி இன்பம் பயக்கும்.

உ

சிவசிவ

# முருகன் துதி

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்;
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்;—பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்திவாழ் வே!

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே!—ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

— பதினோராந்திருமுறை

பன்னிரு கரத்தாய்! போற்றி!
பசும்பொன்மா மயிலாய்! போற்றி!
முன்னிய கருணை ஆறு
முகப்பரம் பொருளே! போற்றி!
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவா ரிதியே! போற்றி!
என்னிரு கண்ணே! கண்ணுள்
இருக்குமா மணியே! போற்றி!

— திருச்செந்தூர்ப் புராணம்

ஆறிரு தடந்தோள் வாழ்க; அறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க; யானைதன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க; வாழ்கசீர் அடியார் எல்லாம்.

— கந்த புராணம்



ஸ்ரீ செந்திலாண்டவன் திருவடி வாழ்க!

சிவசிவ

செந்திலாண்டவன் துணை

# திருச்செந்தூர்க்
# கந்தர் கலிவெண்பா
## மூலமும் உரையும்

---

### சிவபெருமானின் சொரூப நிலை

1. * பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்—தேமேவு

2. நாதமும்நா தாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமாய்—ஆதிநடு

3. அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த

4. குறியுங் குணமுமொரு கோலமுமற்(று) எங்கும்
செறியும் பரம சிவமாய்

**இதன் பொருள்:** செம் கமலம் பூ மேவு - செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற, புத்தேளும் - பிரமதேவனும், தேற அரிய - தெளிதற்கரிய, பா மேவு - செய்யுள் நடையில் அமைந்த, தெய்வம் - தெய்வத் தன்மைவாய்ந்த, பழ மறையும் - பழமை யாகிய வேதங்களும், தேம் மேவும் - இனிமை நிறைந்த, நாதமும் - நாத தத்துவமும், நாதம் அந்தம் முடிவும் - (அந்) நாத தத்துவத்தின் முடிவாகிய (உண்மைப்) பொருளும், நவைதீர்ந்த - (மலக்) குற்றமற்ற, போதமும் - (ஆன்ம) அறிவும், காணாத - அறியாத, போதம் ஆய் - பேரறிவாயும், ஆதி நடு அந்தம் கடந்த - முதலும் இடையும் கடையும் அற்ற, நித்தியம் போதம் ஆனந்தம் ஆய் - சத்து சித்து ஆனந்த வடிவாயும், பந்தம்

---

* 1—36 கண்ணிகள்: முருகக் கடவுளுக்கும் சிவபெருமானுக்கும் சிறிதும் வேற்றுமை இன்மையால் சிவபெருமானுக்குரியனவற்றையெல்லாம் இங்கு முருகக் கடவுளுக்கு ஏற்றிக் கூறப்பெற்றுள்ளன.

தணந்த - (இயல்பாகவே) பாசத்தினின்றும் நீங்கிய, பரம் சுடர் ஆய் - சிறந்த ஒளிவடிவாயும், வந்த ஒரு - வழங்கப் படுவதொரு, குறியும் - பெயரும், குணமும் - குணமும், கோல மும் - வடிவும், அற்று - இன்றி, எங்கும் செறியும் - எவ்விடத் தும் நிறைந்திருக்கின்ற, பரமசிவம் ஆய் - மேலான மங்கலப் பொருளாயும் என்றவாறு.

**விளக்கம்:** ஆசிரியர், ஆன்றோர் மரபு வழுவாதபடி மங்கல மொழி பலவற்றினும் சிறந்த 'பூ' என்னும் சொல்லை இந்நூலின் முன்னர் மங்கலச் சொல்லாக வைத்தோதியருளினார்; அன்றியும் இந்நூலாசிரியர், திருச்செந்தூர் முருகக் கடவுளின் திருவருளால் ஊமைத்தன்மை நீங்கி, வாக்கு வன்மை பெற்று நின்றபோது, "எம்பால் கருணை சுரந்தருளிய இப் பெருமானை எம்மொழி கொண்டு முதற்கண் அமைத்துப் பாடுவேன்" என்று சிறிது திகைப்புக்கொள்ள, கருணைத் தடங்கடலாகிய சண்முகக் கடவுள் தமது திருத்தோளில் அணிந்திருந்த பூமாலையினின்றும் ஒரு பூவினை வீழ்த்தியருளி, இப் பொருளின் பெயராகிய 'பூ' என்பதனையே முதன்மொழியாக அமைத்து எம்மைத் துதிப் பாயாக என்ற குறிப்பைக் காட்ட, அக்குறிப்பினை உள்ளுணர் வால் உணர்ந்து 'பூ' என்னும் சொல்லை முன்னர் வைத்துக் கூறியருளினார் என்றும் சான்றோர் கூறுவர்.

புத்தேள் - கடவுள். செங்கமலப் புத்தேள் - பிரமதேவன். கமலம் - தண்ணீரை அலங்கரிப்பது; தாமரை. பிரமன், மறைக் குரியவன்; ஆயினும் அவன் அதனுண்மைப்பொருளை அறியான் என்பார், '**புத்தேளும் தேறரிய**' என்றார். புத்தேளும் என்ற உம்மையால் திருமால், இந்திரன் முதலியோர்களையுங் கொள்க. தேறரிய - யாவராலும் தெளிதற்கு அருமையான எனினுமாம். பா - பரப்புமாம். மறை - மறைந்த (இரகசியப்) பொருளை யுடையது; வேதம் பாமேவு தெய்வப் பழமறை: "தொடுக் குங் கடவுட் பழம் பாடல்" என்பது **மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்**-61--ஆம் பாடல் அடி. தேமேவு-தெய்வத்தன்மைபொருந் தியஎனினுமாம், நாதம்-நாததத்துவம்; இது, சுத்த மாயையில் சாந்தியாதீத கலையின்கண் விளங்குவது. ஆதி நடு அந்தம்

கடந்த - உற்பத்தி, திதி, நாசங்களைக் கடந்த எனினுமாம். நித்தியம் ஆனந்தம் போதம்-இம்மூன்றும் சச்சிதானந்த வடிவு; எக்காலத்தும் அழியாமல் ஒரே தன்மையுடையதாயிருக்கின்ற பேரின்ப அறிவுமாம்.

பந்தந் தணந்த பரஞ்சுடராய்; 'வேண்டுதல் வேண்டாமை யிலான்' என்பது திருக்குறள் - கடவுள் வாழ்த்து 3. நிர்க் குணத்தை, 'குணமுமற்று' என்றார். குணம் என்றது மாயா குணங்களாகிய சாத்துவிதம், இராசதம், தாமதம் என்னும் மூன்றினை. எங்கும் செறியும் பரமசிவமாய்: 'பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமே' என்பது **தாயுமானவர் பாடல்** அடி. பரமசிவம் - (உயிர்களுக்கு) மேலான சுகத்தை உண்டாக்குபவர்.

'தேறரிய' (தேற+அரிய) என்பதில் 'அ' தொகுத்தல் விகாரம். 'செங்கமலப் பூமேவு' எனவும், 'நித்திய போத ஆனந்தம்' எனவும் மாற்றிப் பொருள் கொள்க. புத்தேளும் பழமறையும் என்று கூட்டுக.

## சிவபெருமானே தனிப்பரம்பொருள்

—அறிவுக்(கு)

5. அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்(கு) எட்டா வடிவாய்த்—தனதருளின்

6. பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளாய்

இ - ள்: அறிவுக்கு அநாதி ஆய் - அறிவிற்கு முற்பட்ட தாயும், ஐந்தொழிற்கும் அப்புறம் ஆய் - ஐந்து தொழில்களுக் கும் அப்பாற்பட்டதாயும், மனாதிகளுக்கு - மனம் முதலிய கரணங்களுக்கு, எட்டா வடிவு ஆய் - எட்டாத வடிவாயும், தனது அருளின்-தனது திருவருட் சத்தியினால், பஞ்சவித ரூபம் - (பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என் னும்) ஐவகை வடிவினையுடைய, பரசுகம் ஆய் - மேலான இன்பப் பொருளாயும், எவ்வுயிர்க்கும் - (உலகிலுள்ள) எல்லா உயிர்களுக்கும், தஞ்சம் என நிற்கும்-பற்றுக்கோடாக நிற்கின்ற தனிப்பொருள் ஆய் - ஒப்பற்ற பரம்பொருளாயும் எ - று.

**விளக்கம் :** அறிவுக்கு அநாதியாய் - அநாதியே முற்றறிவுடையதாய் எனினுமாம். ஐந்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. ஐந்தொழிலும் சிவ சத்தியின் சங்கற்பத்தால் நடைபெறத் தான் அவற்றிற்கு அப்பாற்பட்டது என்பார், '**ஐந்தொழிற்கும் அப்புறமாய்**' என்றார். மறுதி - மனம் வாக்குக் காயம் என்ற முக்கரணங்கள் ; மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்று அந்தக் கரணங்களுமாம். மறுதிகளுக் கெட்டா வடிவாய் ; "மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே" என்பது திருவாசகம்–சிவபுராணம் 45-ஆம் அடி.

பஞ்சவிதரூபம் - ஐந்துவிதமான உருவம். இதனை, "மாயன் பிரமன் உருத்திரன் மகேசனொடு, ஆயுஞ் சிவமூர்த்தி ஐந்து" எனவரும் ஔவைக் குறள் வெண்பாவால் அறிக.

பஞ்சவித ரூப பரசுகமாய் - (சிவன், சத்தி, சதாசிவன், மகேசன், உருத்திரன் என்ற) ஐவகைப் பெயர் பெற்று (முறையே சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்த வித்தை என்னும் சிவதத்துவ புவனங்களில் வைகும்) அபர முத்திப் பெரும் போகத்தை அளிப்பதாய் எனினுமாம். ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்கள் எல்லாவற்றிற்கும் துணை என்பார். '**எவ்வுயிர்க்கும் தஞ்சம்**' என்றார். அநாதி - ஆதியில்லாதது. பஞ்சம் - ஐந்து. தஞ்சம் - பற்றுக்கோடு ; துணை.

அன்று, ஏ : அசைகள். அநாதி என்பது மறுதி என்னும் எதுகையினை நோக்கி அறுதி எனத் திரிந்தது.

### சிவபெருமானே சகல தொழிற்கும் அதிபன்

—எஞ்சாத

7. பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித்—தாரணியில்

8. இந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்கும்
தந்திரத்திற் சாராது சார்வதுபோல் — முந்தும்

9. கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த் — திரிகாரணம்

10. ஆகவரும் இச்சை அறி(வு)இயற்ற லால்இலய
போகஅதி காரப் பொருளாகி

இ - ள்: எஞ்சாத - குறையாத, பூரணம் ஆய் - பூரணமாயும், நித்தம் ஆய் - என்றும் உள்ளதாயும், போக்கும் வரவும் புணர்வும் - இறப்பும் பிறப்பும் கூடுதலும் (பிரிதலும்), காரணமும் இல்லா - (தனக்கு ஒரு) மூலமும் இல்லாத, கதி ஆகி - ஆதாரப் பொருளாயும், தாரணியில் - இவ்வுலகத்தில், இந்திரசாலம் புரிவோன் - இந்திரசால வித்தை செய்பவன், யாவரையும் - எல்லோரையும், மயக்கும் தந்திரத்தில் - மயக்குகின்ற தந்திரத்தில், தான் சாராது - தான் பொருந்தாது, சார்வது போல் - (அதன் சார்பாய்ப்) பொருந்தி நிற்பதுபோல, முந்தும் - (தனக்கு) முற்பட்ட, கரு இன்றி நின்ற கரு ஆய் – காரணமின்றி நின்ற முற்பொருளாயும், உருவு இன்றி நின்ற அருளே உருவு ஆய்-(பொருள் பற்றிய மாயா) உருவமில்லாமல் விளங்குகின்ற அருளே திருமேனியாகவும், திரிகரணம் ஆக வரும் - (மனம் வாக்குக் காயம் என்னும்) முக் கரணங்கள் காரணமாக வருகின்ற, இச்சை அறிவு இயற்றல் ஆல் - இச்சா ஞானக் கிரியா சத்திகளால், இலயம் போகம் அதிகாரம் பொருள் ஆகி - இலயம் போகம் அதிகாரம் என்னும் மூன்றவத்தைகளையுடைய பொருளாயும் எ - று.

**விளக்கம் :** பூரணம் - நீக்கமற எங்கும் நிறைந்த பொருள். நித்தம்-என்றும் உள்ள பொருள். **புணர்வும்** என்றதனால் பிரிதலும் கொள்ளப்பட்டது. "போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே" என்பது **திருவாசகம் – சிவபுராணம்** 77-ம் அடி. காரணமும்-மூலமும்-முற்பட்டதும். கதி–எல்லாப் பொருள்களும் புக்கொடுங்குமிடம்; மோட்சம். தாரணி – தன்மீதுள்ள எல்லாப் பொருள்களையும் தாங்குவது; பூமி. இந்திரசாலம் - அற்புதங்களைக் காட்டும் மாய வித்தை; செப்படி வித்தை. இறைவன் எப்பொருளிலும் சார்ந்தும் சாராது நிற்றலை, "நீயலாற் பிறிதுமற் றின்மை, சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே" எனவரும் **திருவாசகம்-கோயிற்றிருப்பதிக** அடிகளால் அறிக. கருவின்றி நின்ற கரு - ஒன்றினின்றும் தோன்றாதது; சுவயம்பு; "கருவினாலன்றியே கருவெலா மாயவன்" என்பது **தென்குடித் திட்டைத் தேவாரம்**.

இறைவன், அருளே திருமேனியாகக் கொள்வன் என்பதை **சிவஞான சித்தியார்** - சுபக்கம் 67-ஆம் திருவிருத்தத்தால் அறிக. **இச்சா சத்தி** (இச்சை) - இறைவன், உயிர்களின் மலத்தை நீக்கிச் சிவத்துவத்தை அளிக்கவேண்டுமென்ற கருணை. **ஞான சத்தி** (அறிவு)- சிவத்துவத்தை அளித்தற்கு வேண்டிய உபாயங்களை எல்லாம் ஆன்மாக்களுக்கு இறைவன் உணர்த்துதல். **கிரியா சத்தி** (இயற்றல்) – இறைவன், தனது கருணையால் உலகத் தோற்ற முதலிய காரியங்கள் யாவற்றையும் நடத்துதல். இவற்றை, "ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியை" எனவரும் **சிவஞான சித்தியார்** - சுபக்கம் 83-ஆம் திருவிருத்தத்தால் உணர்க.

இலயம் - ஒன்றுதல், போகம் - துய்த்தல். அதிகாரம் - தொழில் புரிதல். இச்சா சத்தி மட்டும் எங்கும் ஒரு தன்மைத்தாய் வியாபிக்கும்; ஞான சத்தி தனித்து நின்றும், கிரியாசத்தி தனித்து நின்றும் வியாபிப்பதே '**இலயம்**' எனவும், ஞானக் கிரியா சத்திகள் ஒத்து நின்று வியாபிப்பதே '**போகம்**' எனவும், ஞான சத்தி மிக்கு நின்று கிரியா சத்தி குறைந்தும், கிரியா சத்தி மிக்கு நின்று ஞான சத்தி குறைந்தும் வியாபிப்பதே '**அதிகாரம்**' எனவும் பெயர் பெறும். இறைவன் ஞான சத்தியால் அறிந்து, கிரியா சத்தியால் பிரபஞ்சத்தை இயற்றுவன்; இவ்விரண்டு சத்திகளும் இறைவனை விட்டு நில்லா; இறைவனும் அச்சத்திகளை விட்டு நில்லான்; ஆகவே, இச் சத்திகள் இறைவனுக்குத் தாதான்மிய (ஒற்றுமைப்பட்டிருக்கும்) சத்திகளாம்.

போல்: உவமவுருபு. அருளே, ஏ; தேற்றம் (தெளிவு). 8-9 கண்ணிகள் உவமையணி.

**சிவபெருமான் ஆன்மாக்களுக்கு வினைப்பயனை அளித்து மறைத்தருளுதல்**

—ஏகத்(து)

11. உருவும் அருவும் உருவருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய்—இருள்மலத்துள்

12. மோகமுறும் பல்லுயிர்க்கு முத்திஅளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்—தேகமுறத்

13. தந்த அருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்

14. ஆறத்து வாவு(ம்)அண்டத்(து) ஆர்ந்தஅத்துவாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரும்

15. ஈரிரண்டுதோற்றத்(து)எழுபிறப்புள் யோனிஎண்பான்
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள்—தீர்வரிய

16. கன்மத்துக்(கு) ஈடாய்க் கறங்குஞ் சகடமும்போற்
சென்மித்(து) உழலத் திரோதித்து

இ - ள்: ஏகத்து—ஒரு வடிவிலேயே, உருவும்(ஆகி) - (மகேசன், உருத்திரன், திருமால், பிரமன் என்னும் நான்கு) உருவத் திருமேனியாயும், அருவும் (ஆகி) - (சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கு) அருவத் திருமேனியாயும், உரு அருவும் ஆகி - (சதாசிவம் என்னும் ஒரு) அருவுருவத் திருமேனியாயும், பருவம் வடிவம் பல ஆய் – (அடியார்களின்) பக்குவ நிலைக்கு ஏற்பக் கொள்ளப்பெறும் திருவுருவங்கள் பலவாயும், இருள் மலத்துள் – அறியாமையை உண்டாக்கும் ஆணவ மலத்துள் (அழுந்தி), மோகம் உறும் - மயக்கம் அடையும், பல் உயிர்க்கும் – எண்ணிறந்த உயிர்கட்கும், முத்தி அளித்தற்கு - முத்திப்பேற்றைக் கொடுத்தருளும் பொருட்டு, மல பாகம் உற - (அவ்) வாணவ மலம் பக்குவமடைய, கடைக்கண் பாலித்து – கருணை கூர்ந்து, தேகம் உற - (அவ்வுயிர்கள்) உடலைப் பெறுமாறு தந்த - (மண் முதல் நாதம் ஈறாகிய முப்பத்தாறு தத்துவங்களையும்) அளித்தற்கு(க் காரணமாகவுள்ள), அரு உருவம் சார்ந்த– அருவமும் உருவமுங் கூடின, விந்து மோகினி மான் - சுத்த மாயை அசுத்த மாயை பிரகிருதி மாயை (என்னும் மூன்றினோடு), பெந்தம் உற - கட்டுப்பட, பிணிப்பித்து - கட்டுவித்து, மந்த்ரம் முதல் ஆறு அத்துவாவும் - மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்ற ஆறு வழிகளையும், அண்டத்து ஆர்ந்த அத்துவாக்களும் - (பதினான்கு) உலகத்திலுள்ள வழிகளையும், முன் - முன்னே, கூறத்தகும் - (தக்கபடி) கூறப்பட்ட, சிமிழ்ப்பில் கூட்டுவித்து - கட்டில் சேர்ப்பித்து, மாறி

வரும் - மாறிமாறி வருகின்ற, ஈர் இரண்டு தோற்றத்து - நால் வகைத் தோற்றத்தினையுடைய, எழு பிறப்புள் - எழுவகைப் பிறப்பினுள், எண்பான் ஆரவந்த நான்கு நூறு ஆயிரத்து யோனியுள் - எண்பத்துநான்கு லட்சம் யோனிபேதமுடைய உயிர்களில், தீர்வு அரிய - (அனுபவித்தாலன்றித்) தீர்த்தற் கரிய, கன்மத்துக்கு ஈடாய் - (இரு) வினைக்குத் தக்கவாறு, கறங்கும் சகடமும்போல் - காற்றாடியும் (வண்டிச்) சக்கரமும் போல, சென்மித்து - பிறந்து, உழல - உழலும்படி செய்து, திரோதித்து - (பின்) மறைத்து எ - று.

**விளக்கம் :** உரு - வடிவுடையது; சகளத் திருமேனி. அரு - வடிவில்லது; நிட்களத் திருமேனி. அருவுரு - வடிவும் வடிவில்லதுமாயது; சகளநிட்களத் திருமேனி. அரு, அருவுரு, உரு இவை முறையே **இலய போக அதிகாரம்** என்னும் தானத்தைப் பெற்றுத் திகழும். உரு நான்கும், அரு நான்கும், அருவுரு ஒன்றுமாக **ஒன்பது வகை**யாம். இவற்றை, '**நவந்தரு பேதம்**' என்பர். இத்திருவுருவங்கள் மூன்றும் ஆன்மாக்களின் பிறப்பை ஒழித்தற்கு இறைவன் கொண்டருளிய கருணை வடிவங்களாம். இதனைச் **சிவஞான சித்தியார்** - சுபக்கம் 58, 75, 164-ஆம் திருவிருத்தங்களால் நன்கு அறியலாம். பருவ வடிவம் பல - அடியார்களின் பக்குவ நிலைக்கு ஏற்பக் கொள்ளப்பெறும் திரு வுருவங்கள் பல; அவை, **போகவடிவம், கோர(பேத)வடிவம், யோகவடிவம்** என்பன. இங்குக் கூறிய இறைவனின் உருவமெல் லாம் இருவினைக்கு ஈடாகத் தோன்றும் ஆன்மாக்களின் உருவம் போல், அல்லாமல், ஆன்மாக்கள் புரியும் தியானம், பூசை முதலியவற்றின் பொருட்டுச் சிவசத்தியாகிய திருவருட் குணங் களுள் இன்னது இன்னது இன்ன இன்ன உறுப்பு என்று பாவிக்கப்படும் உருவமாம்.

மோகம் உறும் - மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பனவற்றைப் பற்றிக் கிடக்கின்ற எனினுமாம். இவை **ஆணவமலகாரியம்** ஆகும். பல்லுயிர் - இங்கே, சகலர்; (ச + கலர்): இவர் கலையாதி தத்துவங்களோடு கூடினவர்; ஸ - கூட, கலர் - கலையுடையவர். இவர் ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களாலும் பிணிப்புண்டவர்.

இவர் தேவர், மக்கள் முதலாகவுள்ள உயிர்கள். முத்தி - சிவப் பேறு. ஆணவமலம் பக்குவமடைதல் என்றது மலம் தனது சத்தி தேய்தற்குரிய துணைக் காரணங்களோடு கூடுதலே. ஆணவமலை சத்தி தேய்தலும், சிவப்பேறு அடைதலும் திருவருளின் துணையினாலாகும். கடைக்கண் - கடாட்சம்; கருணை.

மண் முதல் நாதம் ஈறுகிய முப்பத்தாறு தத்துவங்கள்- ஆன்ம தத்துவம்-24, வித்தியா தத்துவம்-7, சிவ (சுத்த) தத்துவம்-5 ஆக முப்பத்தாறு தத்துவங்கள். இவற்றின் விரிவைச் **சித்தாந்தக் கட்டளையிற்** காண்க. **ஆன்ம தத்துவம்** - ஆன்மாவோடு சம்பந்தப்பட்டிருப்பது. **வித்தியா தத்துவம்** - ஆன்மாக்களுக்குச் சிற்றறிவை எழுப்புவது. **சிவ (சுத்த) தத்துவம்**- ஆன்மாக்களுக்குப் பேரறிவும் பெருந்தொழிலும் உண்டு பண்ணுவது.

**விந்து** - சுத்தமாயை; குடிலை. இது நித்தமாய், வியாபகமாய், அருவமாய், மெய்ப்பொருளாய், சடமாய், சுத்தப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாய், மயக்கஞ் செய்யாததாய் இருப்பது. **மோகினி**-அசுத்த மாயை; இது, நித்தமாய் வியாபகமாய், அருவமாய், மெய்ப்பொருளாய், சடமாய், அசுத்தப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாய், வினைக்குப்பற்றுக் கோடாய், மயக்கஞ் செய்வதாய் இருப்பது. **மான்** - பிரகிருதி மாயை; இது கலையில் நின்று தோன்றுவதாய், முக்குண முதல் நிலமீறாகிய போக்கியப் பொருள்கள் உண்டாவதற்கு ஏதுவாய், முக்குணங்களும் சமமாய் அவைீ மயில் முட்டை நீரிற் பஞ்சவர்ணம் போலச் சூக்குமமாய், அவிச்சை (அறியாமை) ஆங்காரம், அவா, ஆசை, கோபம் என்னும் பஞ்சகிலேசம் விளைதற்குக் காரணமாய் இருப்பது. (மா – ஒடுங்குதல், யா-வருதல்; ஆகவே, எல்லாக் காரியங்களும் தன்பால் வந்து ஒடுங்குதற்கும், தன்னினின்றுந் தோன்றுதற்கும் காரணமாய் நிற்பதுவே **மாயை** எனப்படும்.)

**அந்துவா** - வழி; உயிர்களின் மல பந்தத்தை அறுத்துச் சிவஞானத்தை உண்டாக்கி முத்தி அடைவதற்கு வகுத்த வழி. **மந்திரம் முதல் ஆறு அந்துவா** - மந்திராத்துவா, பதாத்துவா,

வன்னத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என்னும் ஆறு அத்துவா. இவை முறையே 11-81-51-224-36-5 கூறுபாடுகளை உடையன. இவற்றுள் முதல் மூன்று சொல் வடிவாயும், இறுதி மூன்று பொருள் வடிவாயும் நிகழ்ந்து ஆன்மாக்களின் வினைப்பயன் நுகர்ச்சிக்கு ஏதுவாய் விளங்கும். 'அண்டத்தார்ந்த அத்துவா' எனத் தனியே பிரித்துக் கூறின மையால், முற்கூறிய ஆறத்துவாவும் பிண்டத்திலுள்ளவை ஆகும். (பிண்டம் - சரீரம்.) "அண்டத்திலுள்ளவை பிண்டத் திலும் உண்டு" என்பது பழமொழி. அத்துவ சுத்தி இன்றி முத்தியை விரும்புபவர் கோலின்றி நடக்கத் தொடங்கிய குருடர்போலவும், தோணி இன்றிக் கடலைக் கடக்க எண்ணி யவர்போலவும் ஆவர் என வாய்| சங்கிதை கூறும். (அத்துவ சுத்தி - நிருவாண தீட்சையில் நடைபெறும் ஒரு கிரியை.) சிமிழ்ப்பு – கட்டு.

ஈரிரண்டு தோற்றம் - அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றம். இவற்றுள் அண்ட சம் - முட்டையிலே தோன்றுவன. அண்டம் - முட்டை; ஜம் - பிறந்தது. அவை மீன், பறவை, பல்லி முதலியன. சுவேதசம் - வேர்வையிலே தோன்றுவன. (சுவேதம் + ஜம் = சுவேதசம். சுவேதம் - வேர்வை.) அவை பேன், கிருமி, கீடம், விட்டில் முதலியன. உற்பிச்சம் - வித்து, வேர் முதலிய வற்றை மேற்பிளந்து தோன்றுவன. (உத்பித் ஜம்-மேற்பிளந்து தோன்றுவது.) அவை மரம், செடி, கொடி, பூண்டு முதலியன. சராயுசம் - கருப்பையிலே தோன்றுவன. (சராயு - கருப்பா சயப்பை.) அவை தேவர், மானுடர், விலங்குகள் முதலியன.

எழு பிறப்பு - தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்பு. எழு பிறப்புள் முதல் நின்ற ஆறும் **இயங்கியற் பொருள்**. இறுதியில் நின்ற ஒன்று **நிலையியற் பொருள்**. இயங்கியற்பொருள் (இயங்கு திணை) **சங்கமம்** அல்லது **சரம்** எனவும், நிலையியற் பொருள் (நிலைத்திணை) **தாவரம்** அல்லது **அசரம்** எனவும் பெயர் பெறும்.

எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்கள்: 'உரைசேரு மெண்பத்து நான்குநூறாயிரமாம் யோனி

பேதம், நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்" என்பது **திருஞானசம்பந்தர் - திருவீழிமிழலைத் தேவாரம்.** யோனி - கருவேறுபாடுகள். தேவர் 14-இலட்சமும், மக்கள் 9-இலட்சமும், விலங்கு 10-இலட்சமும், பறவை 10-இலட்சமும், ஊர்வன 11-இலட்சமும், நீர்வாழ்வன 10-இலட்சமும், தாவரம் 20-இலட்சமுமாக 84-இலட்சம் பேதம் ஆகும்.

கறங்கும் சகடமும் போற் செனித்து; "ஆடுங் கறங்குந் திரிகையும் போல அலைந்தலைந்து" என்பது **தாயுமானவர் பாடல்-** பாயப்புலி 56-ஆம் பாடல் அடி 14-ஆம் கண்ணியில், 'உட் கூறத்தகும்' என்றும் **பாடம்.**

மலம் என்பதனோடு அகரச்சுட்டு வருவிக்கப்பட்டது. பெந்தம் - பந்தம் என்னும் சொல் மோனை நோக்கி அவ்வாறு ஆயிற்று. ஆகி என்பதை உரு அரு என்பவற்றோடுங் கூட்டுக. கூட்டுவித்து, உழலத்திரோதித்து எனக் கூட்டுக. மலபாக முறவே, பெந்தமுறவே, ஏ இரண்டும் அசைகள். 'ஆரவந்த' என்பது எண்பான் என்பதனோடு நான்கு நூறாயிரம் என் பதனை ஒற்றுமைப்படுத்துவதற்கு வந்த அடைமொழி.

**சிவபெருமான், ஆன்மாக்களுக்குச் சொர்க்காதி போகங்களையும் பதமுத்திகளையும் அளித்துச் சத்திநிபாதம் பதிதற்கு ஏற்ற பக்குவ காலத்தை எதிர்நோக்கி அருளுதல்**

—வெங்கிரய

17. சொர்க்காதி போகமெலாந் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்கா ரணஞ்சிறிது நண்ணுதலும்—தர்க்கமிடும்

18. தொன்னூற் பரசமயந் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து—முன்னூல்

19. விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்(து)—அருள்பெருகு

20. சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்(து)
ஆலோகந் தன்னை அகற்றுவித்து—நால்வகையாம்

21. சத்திநி பாதந் தருதற்(கு) இருவினையும்
ஒத்துவருங் காலம் உளவாகிப்—பெத்த

22. மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற்(று) அருளி

இ - ள்: வெம் நிரயம் - கொடிய நரக (துன்பங்களையும்). சொர்க்காதி - சுவர்க்கம் முதலிய உலகங்களில் (அநுபவிக்கப் படும்), போகம் எ(ல்)லாம் - எல்லாப்போக இன்பங்களையும், துய்ப்பித்து - ஊட்டுவித்து, பக்குவத்தால் - (மல) பரிபாகத் தால், நல் காரணம் - (முத்தி அடைதற்குரிய) நல்ல புண்ணி யம், சிறிது நண்ணுதலும் - சிறிது பொருந்திய வளவில், தர்க் கம் இடும்-(தம் தம் சமயமே சிறந்தது எனத்) தர்க்கமிடுதற்கு (ஏதுவாக இயற்றப்பெற்றுள்ள), தொல் நூல்-பழைமையான நூல்களையுடைய, பரசமயம் தோறும் - புறச் சமயங்களிலெல் லாம், அது அதுவே - அவ்வச் சமயநூலே, நல் நூல் என தெரிந்து - உண்மை நூல் என்று அறிந்து, நாட்டுவித்து - (அவற்றில்) அழுந்துமாறு செய்து (அதன்பின் புறச்சமயங் களினின்றும் அகச் சமயத்துட் புகுத்தி), முன்னூல் - வேதங் களுள் (கூறியுள்ள), பல விரதம் முதலாய - பலவித விரதங் கள் ஆச்சிரமங்கள் முதலியவற்றை (அநுட்டிக்கச் செய்து அதன் பின்னர்), மெய் தவத்தின் — உண்மையாகச் செய்த தவத்தின் பயனாகி, உண்மை - உண்மை நெறியை (உணர்த் தும் சிவாகமத்தில் கூறிய) சரியை கிரியா யோகம் சார்வித்து - சரியை கிரியை யோகம் என்னும் (மூன்றையும் ஒன்றன்பின் ஒன்றாகச்) சேர்ப்பித்து (அவற்றின் வாயிலாக), அருள்பெருகு- திருவருள் பெருகாநின்ற, சாலோகம் சாமீபம் சாரூபமும் - சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் மூன்று பத முத்திகளை யும், புசிப்பித்து – அனுபவிக்கச் செய்து, ஆலோகம் தன்னை அகற்றுவித்து - தெளிந்த அறிவை விரிவடையச் செய்து, நால் வகையாம் - நான்கு வகைப்பட, சத்திநிபாதம் - சத்திநிபாதங் களை, தருதற்கு-தருதற்கேதுவாகிய, இருவினையும் ஒத்து வரும் காலம் - இருவினையொப்பு உண்டாகுங் காலம், உள ஆகி - தோன்றி, பெத்தம் - பாசத்தை (த்தருதற்கு மூல காரண

மான), மலபரி பாகம் – (ஆணவ) மலம் அழிதற்குரிய பக்குவ நிலை, வரும் அளவில் – வரும்பொழுது, பல் நாள் – பல கால மாய், அலமருதல் கண் உற்று - (கறங்கும் சகடமும் போலச்) சுழன்றுகொண்டிருத்தலை நோக்கி, அருளி-கருணைகூர்ந்து எ-று.

**விளக்கம் :** நற்காரணம் - நல்ல புண்ணியம். சமய வாதிகள் தத்தம் சமயமே சிறந்தது என்று தர்க்கமிட்டு அவ்வச் சமய நூலின் ஒழுக்கத்தில் படிந்து கிடப்பர் என்பார், '**தர்க்கமிடும், தொன்னூற் பரசமயந்தோறும் அதுவதுவே, நன்னூல் எனத் தெரிந்து நாட்டுவித்து**' என்றார்; 'சமய வாதிகள் தத்தம் மதங்களே, அமைவ தாக அரற்றி மலைந்தனர்' என்பது **திருவாசகம்**– போற்றித் திருவகவல் 52-53-ஆம் அடிகள். "புறச்சமய நெறி நின்றும்" எனவரும் **சிவஞான சித்தியார்–சுபக்கம்** 263–ஆம் திரு விருத்தத்தால் 18–19 ஆகிய இவ்விரு கண்ணிகளின் கருத்து நன்கு விளங்கும்.

**புறச்சமயம்** - தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்பன. **அகச்சமயம்**-பாடாண வாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவரவவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்பன. முன்னூல் - வேதம். உண்மை - இங்கே, உண்மை நெறியை உணர்த்தும் சிவாகமங்கள். (உண்மை நெறி - வீடு கூடும் நெறி.) வேதநெறியினின்று விரதாதிகளை அநுட்டித்தோர் சுவர்க்காதி போகங்களையும், சிவாகமநெறியினின்று சரியை கிரியை யோகங்களை அநுட்டித்தோர் பதமுத்திகளையும் பெறுவர்: "சுருதிவழி யொழுகினவர்கள் சுவர்க்கத்தார்; ஆகம நூற் - சரியைகிரி யாயோகர் சாலோக சாமீப - உருவுவமையினராக உதவுதும்" என்பது **கோயிற் புராணம்.**

**விரதம்** - மனம் பொறிவழி செல்லாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம் வாக்குக்காயம் என்னும் மூன்றினாலும் கடவுளைச் சிறப்பாக வழிபடுதல். **தவம்**- நெருப்பு, நீர், மழை, வெயில், பனி முதலியவற்றில் நின்று மனமும் பொறியும் ஒரு வழிப்படுமாறு உடம்பை வருத்திச் செய்யும் சாதனை.

**சரியை** - சிவாலயத்திற்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு புரிதல். (சரியை - பணிவிடை.) **கிரியை** - சிவலிங்கப் பெருமானை அகத்தும் புறத்தும் வழிபடல். (கிரியை - பூசை.) **யோகம்** - மனத்தை ஐம்பொறிகளின் வழியே செல்லாவண்ணம் நிறுத்திச் சிவத்தைத் தியானித்தல். சரியை கிரியை யோகம் இம்மூன்றும் முறையே **தாதமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம்** எனப் பெயர் பெறும். தாத மார்க்கம் - அடிமை நெறி. தாத - அடிமை. மார்க்கம் - நெறி. சக மார்க்கம் - தோழ நெறி. சக - கூட.

சரியை கிரியை யோக மார்க்கங்களில் நின்று ஒழுகினும் திருவருட் பெருக்கு விளக்கமுற்றபோதுதான் சாலோக சாமீப சாரூபங்களை அடைதல் கூடும் என்பார், '**அருள் பெருகு சாலோக சாமீப சாரூபமும்**' என்றார். **சாலோகம்** - சிவபெருமானோடு ஒரே உலகத்தில் இருப்பது; இங்கு, ஒருவர் மனையில் பணி செய்யும் அகத்தொண்டர்க்கு இருக்கும் உரிமைபோல் எங்கும் தடையின்றி இயங்கிப் போகங்களை நுகர்ந்து வாழ்தலாம். **சாமீபம்**- சிவனுக்குச் சமீபத்தில் இருப்பது: இங்கு மைந்தர்க்கு இருக்கும் உரிமைபோல் வைகிப் போக விசேடங்களை நுகர்ந்து வாழ்தலாம். **சாரூபம்** - சிவன் திருவுருவத்தைப் பெற்றிருப்பது; இங்குத் தோழர்க்கு இருக்கும் உரிமைபோல விளங்கிப் போக நுகர்ச்சிகளைப் பெற்று வாழ்தலாம்.

ஆலோகம் - தெளிந்த அறிவு. ஆலோகம் என்பதை அலோகம் என்பதன் விகாரமாகக் கொண்டு ஆலோகந்தன்னை அகற்றுவித்து என்பதற்கு அறியாமையை நீக்கி எனப்பொருள் கூறினும் அமையும். அலோகம் - அறியாமை.

சத்தி - சிவசத்தி; அருள். நிபாதம் - பதிதல்; வீழ்ச்சி. **நால்வகையாம் சத்திநிபாதம்** - மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்ற நான்குவகைப் பக்குவங்கள். இவற்றுள் வாழைத் தண்டில் தீப்பற்றுதல் போன்றது **மந்ததரம்**. ஈர விறகில் தீப்பற்றுதல் போன்றது **மந்தம்**. உலர்ந்த விறகில் தீப் பற்றுதல் போன்றது **தீவிரம்**. கரியில் தீப்பற்றுதல் போன்றது **தீவிரதரம்**. **இருவினையொப்பு** - நல்வினை தீவினைகளிலும்,

அவற்றின் விளைவாகிய புண்ணிய பாவங்களிலும், அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களிலும் ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமின்றி ஆன்ம அறிவின்கண் ஒப்ப வெறுப்பு நிகழ்தல்; "வினையாத்தபின், கணக்கி லாத்திருக் கோல நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே" என்பது திருவாசகம். நல்வினையும் தீவினையும் பொன்விலங்கும், இருப்பு விலங்கும் போன்றவை; ஒருபோதும் தீமையையும், பயன் கருதி நன்மையையும் செய்ய லாகாது; தன் கடமை என்றே நன்மைகளைச் செய்தல் வேண்டும். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்பது **அப்பர் தேவாரம்.** சரியை கிரியை யோக சிவ புண்ணியங்களால் இருவினையொப்பும், இருவினையொப்பால் மலபரிபாகமும், இருவினையொப்பு மலபரி பாகங்களால் சத்திநிபாதமும் உண்டாகும். பெத்தம் - கட்டு; பாசம்.

அதுவதுவே, ஏ; தேற்றம். பல+நாள்=பன்னாள்.

## சிவபெருமான் உலகத்தில் ஆன்மாக்களுக்குத் திருவருள் புரியும்பொருட்டுக் குருபரனாய் எழுந்தருளி வருதல்

—உலவா(து)

23. அறிவுக்(கு) அறிவாகி அவ்வறிவுக்(கு) எட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்

24. கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன்என்(று) ஓர்திருப்பேர் கொண்டு

இ - ள்: உலவாது - கெடாமல் (இருந்து), அறிவுக்கு அறிவு ஆகி-ஆன்ம அறிவுக்கு அறிவாகி, அ அறிவுக்கு எட்டா நெறியில்-அவ்வறிவினுக்கும் (உணர) முடியாத வழியில், செறிந்த நிலை - எங்கும் நிறைந்த நிலையை, நீங்கி - விட்டு, பிறியா கருணை - (தன்னை விட்டு ஒரு காலும்) நீங்காத அருளே, திரு உரு ஆய் - திருமேனியாக (மானிடச் சட்டை தாங்கி), குருபரன் என்று - குருபரன் என்று சொல்லப்பட்ட, ஓர் திரு பேர் கொண்டு - ஒப்பற்ற திருப்பெயர் பூண்டு, காசினிக்கே தோன்றி - உலகில் தோன்றி எ - று.

**விளக்கம் :** பிறியா - பிரியாத. கருணை - அருட்சத்தி. காசினி - காசிப முனிவருக்குப் பரசுராமரால் அளிக்கப்பட்டது ; பூமி. குருபரன் - மேலான குரு. முதல்வன் ஆன்மாவின் அறிவுக்கு அறிவாயிருந்தும், அவ்வான்ம அறிவால் அறியப் படான் : இதனை, "கண்டிடுங்கண் தனைக்காணு" எனவரும் **சிவஞான சித்தியார்** - சுபக்கம் 296-ஆம் திருவிருத்தத்தாலும் அறிக. இறைவன் தனது அருட் சத்தியினின்றும் ஒருபோதும் நீங்கான்; இதனை, "அருளது சத்தி யாகும்" எனவரும் **சிவஞான சித்தியார்** - சுபக்கம் 236-ஆம் திருவிருத்தத்தாலும் உணர்க. சிவபெருமானே உலகில் குருவடிவாய் எழுந்தருளிப் பக்குவான் மாக்களுக்கு அருள்புரிவர் : இதனை, "ஐம்புல வேடரின் அயர்ந் தனை" எனவரும் **சிவஞான போதம்** - 8-ஆம் சூத்திரத்தாலும், "மன்னவன் தன் மகன்வேட ரிடத்தே" எனவரும் **சிவஞான சித்தியார்** - சுபக்கம் 253-ஆம் திருவிருத்தத்தாலும், "அருபரத் தொருவன் அவனியில் வந்து, குருபர னாகி யருளிய பெருமை யை" எனவரும் **திருவாசகம்** - போற்றித் திருவகவல் 75-76 ஆம் அடிகளாலும் அறியலாம்.

காசினிக்கே ஏ ; அசை. கருணை என்பதில் தேற்றேகாரம் தொக்கது. அவ்வறிவுக்கு என்பதில் இறந்தது தழீஇய எச்ச வும்மை விகாரத்தால் தொக்கது.

**சிவபெருமான் பக்குவான்மாக்களுக்குத் திருவருள் புரியும் முறைமை**

—திருநோக்கால்

25. ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழு(ம்)அத்து வாக்கள் இருமூன்றும்—பாழாக

26. ஆணவ மான படலங் கிழித்(து)அறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்

27. அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது

28. தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகிஎங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்

29. வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவுங் கடந்(து)உலவா இன்பம்—மருவுவித்துக்

30. கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவும் மானுமுடன் மால்விடைமேல்—மின்னிடத்துப்

31. பூத்த பவளப் பொருப்(பு)ஒன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த

32. கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய்(து) உள்நின்(று)
ஒருமலத்தார்க்(கு) இன்பம் உதவி

இ - ள்: திருநோக்கால் - அருட்பார்வையினால், ஊழ் வினையை போக்கி - சஞ்சித வினையை ஒழித்து, உடல் அறுபத் தெட்டும் - உடற்கருவிகள் அறுபத்தெட்டும், நிலம் ஏழும் - மூலாதார முதலிய ஏழ் நிலங்களும், அத்துவாக்கள் இருமூன் றும் - மந்திராத்துவா முதலிய ஆறு அத்துவாக்களும், பாழ் ஆக - அற்றொழிய, ஆணவம் ஆன படலம் கிழித்து - ஆணவ மலமாகிய மறைப்பை நீக்கி, அறிவில் காண் அரிய - (ஆன்ம) அறிவால் காணமுடியாத, மெய்ஞ்ஞானம் கண் காட்டி-மெய்ஞ் ஞான நோக்கத்தைத் தந்தருளி, பூணும் - பொருந்திய, அடி ஞானத்தால் - (அத்)திருவடி ஞானத்தால், பொருளும் - பதிப் பொருளையும், ஆன்மாவும் - பசுப்பொருளையும், காட்டி - அறி யும்படி செய்து, கடி ஆர் - காவல் அமைந்த, புவனம் முற்றும்- உலகமாகிய பாசப்பொருள் அனைத்தையும், காட்டி - அறியும் படி செய்து, முடியாது - (எக்காலமும்) அழியாமல், தேக்கு - (எங்கும்) நிறைந்த, பரமானந்தம் தெள் அமுதம் ஆகி - மேலான இன்பத்தை(த் தருகின்ற) தெளிந்த அமுதத்தை ஒத்து, எங்கும் - (அவற்றின் உள்ளும் புறமுமாகிய) எங்கும், நீக்கம் அற - நீங்குதல் இல்லாமல், நின்ற நிலை - நிற்கும்(பரி பூரண) நிலையையும், காட்டி - அறிவித்து, போக்கும் வரவும் - போதலும் வருதலும், நினைப்பும் மறப்பும் - நினைத்தலும் மறத் தலும், பகலும் இரவும் கடந்து - பகலும் இரவும் (ஆகிய இவற் றைக்) கடந்து, உலவா - அழியாத, இன்பம் மருவுவித்து - பேரின்பத்தை அடைவித்து, கன்ம மலத்தார்க்கு - பிரளயா

கலருக்கு, மலர் கண் மூன்றும் - (தாமரை) மலர்போன்ற முக்கண்ணும், தாழ் சடையும் - தொங்குகின்ற சடையும், வல்மழுவும் - வலிய மழுப்படையும், மானும் - மான் கன்றும் (ஆகிய இவற்றோடு), உட(ல)ல் - (பகைவரிடம்) சினங்கொள்கின்ற, மால் விடை மேல் - திருமாலாகிய இடபத்தின்மீது, மின் இடத்து பூத்த - மின்னற்கொடி இடப்பக்கத்திலே தோன்றிய, பவளப் பொருப்பு ஒன்று - பவளமலை ஒன்று, வெள்ளி வெற்பில் - வெள்ளிமலையின்மீது, வாய்த்த அனைய - தோன்றினாற் போல, தெய்வ வடிவு ஆகி - தெய்வத் திருமேனிகொண்டு, மூத்த - அநாதிகாலமாகத் தொடர்ந்த, கரும மலக் கட்டு அறுத்து - ஆணவம் கன்மம் என்ற கட்டுக்களைப் போக்கி, கண் அருள் செய்து - ஞானக்கண்ணை அளித்தருளி, ஒரு மலத்தார்க்கு - விஞ்ஞானகலருக்கு, உள்நின்று - (அறிவுக்கறிவாய்) உள் நின்ற நிலையிலேயே, இன்பம் உதவி - (மெய்ஞ்ஞானத்தை உணர்த்திப்) பேரின்பத்தைக் கொடுத்தருளி எ- று.

**விளக்கம் :** திருநோக்கு - அருட்பார்வை; சட்சுதீட்சை; இஃது ஆசாரியர் தனது கிருபா நோக்கத்தால் சீடனது சஞ்சித வினையை அறுத்து அருள் புரிதல். ஊழ்வினை - (இங்குச்) சஞ்சிதவினை; இது மனவாக்குக் காயங்களால் நான் என்ற முனைப்போடு பிறவிதோறும் சம்பாதித்த வினையைப் புசித்து மிஞ்சியதாகிப் பக்குவப்படுமளவும் சூக்குமமாக மாயையிற் கிடக்கும் புண்ணிய பாவம். இஃது ஒரு வேளாளன், தன் முயற்சியால் விளைந்த தானியத்தைச் சேகரித்து வைத்திருக்கும் களஞ்சியம் போன்றது.

உடல் அறுபத்தெட்டு - (தூலதேகக் கருவிகள் அறுபதும், சூக்குமதேகக் கருவிகள் எட்டும் ஆக) உடற்கருவிகள் அறுபத்தெட்டாம். இதன் விரிவைச் சித்தாந்தக் கட்டளை முதலியவற்றில் காண்க.

அறுபத்தெட்டு - (அறு+பத்து+எட்டு) தம்முள் ஒத்து அறுக்கப்பட்ட (பகுக்கப்பட்ட) பதினெட்டு; அதாவது ஒன்பதாம். உடல் அறுபத்தெட்டு - உடல் (வருதற்கேதுவான) ஒன்பது குணங்கள் எனினுமாம். ஒன்பது குணங்கள் - சாத்து

விகத்திற் சாத்துவிகம், இராசதம், தாமதம்; இராசதத்திற் சாத்துவிகம், இராசதம், தாமதம்; தாமதத்திற் சாத்துவிகம், இராசதம் தாமதம் என்பன. இக்குணங்களெல்லாம் ஆன் மாக்களைப்பற்றி நின்று அவரவர் கருமத்திற்கு ஈடாகப் பற்பல செயல்களை வருவிக்கும். இவற்றின் விரிவைப் **பௌஷ்கராக மத்திற்** காண்க.

**நிலம் ஏழ்** – மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, துவாத சாந்தமாகிய பராபர வெளி என்னும் ஏழிடம். இவற்றுள் **மூலாதாரம்** – குதத்திற்கும் குறிக்கும் நடுவில் இருப்பது; முக்கோண வடிவும் அதில் நான் கிதழ்க் கமலமும் உள்ளதாகப் பாவிக்கப்படுவது; கணபதியை அதிதேவதையாகப் பெற்று விளங்குவது. **சுவாதிட்டானம்**-குறிக் கும் நாபிக்கும் நடுவில் இருப்பது; நாற்கோணமாகவும் அதில் ஆறிதழ்க் கமலமும் உள்ளதாகக் கருதப்படுவது; பிரமனை அதிதேவதையாகப் பெற்று விளங்குவது. **மணிபூரகம்** - நாபித் தானத்திலிருப்பது; மூன்று வட்ட வடிவும் அதில் பத்திதழ்க் கமலமும் உள்ளதாக நினைக்கப்படுவது; திருமாலை அதிதேவதை யாகப்பெற்று விளங்குவது. **அநாகதம்** - இருதய கமலத்தி லிருப்பது; முக்கோண வடிவும் அதில் பன்னிரண்டு இதழ்க் கமலமும் உள்ளதாக எண்ணப்படுவது; உருத்திரனை அதி தேவதையாகப் பெற்று விளங்குவது. **விசுத்தி** - கண்டத்தி லிருப்பது; அறுகோண வடிவும் அதில் பதினாறிதழ்க் கமலமும் உள்ளதாகக் கருதப்படுவது; மகேசுவரனை அதிதேவதையாகப் பெற்று விளங்குவது. **ஆஞ்ஞை** - புருவ மத்தியிலிருப்பது; வட்டவடிவும் அதில் மூன்றிதழ்க் கமலமும் உள்ளதாக எண் ணப்படுவது; சதாசிவனை அதிதேவதையாகப் பெற்று விளங்கு வது. **துவாதசாந்தம்** - பிரமரந்திரத்திற்குமேலிருப்பது; அங்கு ஆயிரத்தெட்டிதழ்க் கமலம் உள்ளதாகத் தியானிக்கப்படுவது; பரசிவத்தை அதிதேவதையாகப் பெற்று விளங்குவது.

இவ்வேழ் நிலங்களை, "ஆதியா தார மாதி யடுக்கெனப் பன்னி றத்த - சோதியேழ் நிலைகள்", "எந்நிலங் களினு மிக்க எழுநிலம்" எனவரும் ஆன்றோர் மொழிகளாலும் அறிக. ஆதா ரம் ஆறும் அவற்றின்மேலுள்ள நிராதாரமாகிய சூனியாகாசம்

ஒன்றுமாக நிலம் ஏழ் என்பாருமுளர். 'ஆணவமான படலம் ......அடி ஞானத்தால்...... நீக்கமற நின்ற நிலைகாட்டி' 26, 27, 28 - இம் மூன்று கண்ணிகளின் உட்கருத்தினை: "சூரியகாந் தக் கல்லினிடத்தே" எனவரும் **சிவஞான சித்தியார்** - சுபக்கம் 280-ஆம் திருவிருத்தத்தால் அறியலாம். ஆணவமான படலம்-ஆணவ மல நோய். **ஆணவம்** - ஆணவமலம்; ஆன்மாவை அணுத் தன்மைப் படுமாறு செய்வது. அணுத்தன்மைப் படுதல்- சிற்றறிவும் சிறு தொழிலும் உடையனுக்குதல். அணு - சிறுமை. படலம் - கண்ணொளியை மறைப்பதொரு நோய். மெய்ஞ் ஞானம் - வீடு பயக்கும் உணர்வு. அடி ஞானம் - திருவடியை அடைவிக்கும் ஞானம்; சிவஞானம். பொருள்-பதிப்பொருள்; சிவம்.

நினைப்பும் மறப்பும் பகலும் இரவும் - இங்கே, நினைப்பு மறப்பாகிய பகலிரவு. இங்ஙனம், நினைப்பும் மறப்பும் இன்றி நிற்கும் நிலையே **சும்மா இருக்கும் நிலை** எனப்படும். இந்நிலையே உண்மை நிலையாம்; இஃது எளிதில் கைகூடுதல் மிக அருமையாம்: "சிந்தையை அடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது", "சும்மா விருக்கச் சுகம்சுக மென்று சுருதி யெல்லாம் - அம்மா நிரந்தரம் சொல்லவும்" என்பன **தாயுமானவர் பாடல்** அடிகள், இனி, நினைப்பும் மறப்பும் அற்ற சுத்த நிலையில் நின்றார்க்குப் பகலும் இரவுமாகிய காலவேறுபாடு தோன்றாது ஆதலால். 'நினைப்பும் மறப்பும் இன்றிப் பகலும் இரவும் இன்றி' எனப் பொருள் கூறலுமாம். உலவா இன்பம் - பேரின்பம். மருவு வித்து - இங்கு, மருவுவித்தலைச் சகலருக்கு ஆக்குக.

**கன்மம்** - ஆன்மாவினால் செய்யப்படும் நல்வினை தீவினைகளாகிய **ஆகாமியமும்**, பின்பு, புண்ணிய பாவ வடிவாகும் **சஞ்சிதமும்**, அதன்பின்பு, இன்ப துன்பங்களாக வரும் **பிராரத்துவமும்** ஆகிய மூவினைகள். மலம்- ஆணவமலம். கன்மமலத்தார்- ஆணவம் கன்மம் என்னும் இருமலங்களையுடைய பிரளயாகலர்; (பிரளய+அகலர்.) இவர் பிரளயத்திலே கலாதி தத்துவங்கள் நீங்கப்பெற்றும், சிருட்டி காலத்திலே கலாதி தத்துவங்களோடு கூடியும் இருப்பவர். கன்ம மலம் உடைமையால், சில **பிறவிகளில்** இவர் முத்தியடைவர். இறைவன்

பிரளயா கலருக்கு அருள்புரியு முறைமையை, "அன்பு - மேவா விளங்கும் பிரளயா கலருக்குத் - தேவாய் மலகன்மம் தீர்த்தருளி" எனவரும் **போற்றிப் பஃறொடை** 61-ஆம் கண்ணியாலும் "ஏற்றுக் குன்றுளேயிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி" எனவரும் **திருவிளையாடற் புராணம்** கடவுள் வாழ்த்து 4-ஆம் பாடல் அடியினாலும் அறியலாம்.

மானுமுடன் - மான் கன்றுடனே எனினுமாம். உட(ல)ல் - கோபித்தல். மால்விடை-பெரியவிடை(எருது) எனினுமாம். இங்கு, மின் உமாதேவியாரையும், பவளப் பொருப்பு சிவ பெருமானையும், வெள்ளி வெற்பு இடபத்தையும் குறிப்பன. மின்னிடத்து......பவளப்பொருப்பு...வாய்த்தனைய; "வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும், தெள்ளு பேரொளிப் பவளவெற் பென" என்பது **பெரிய புராணம்**-திரு நாவுக்கரசு 379. 'மலர்க்கண் மூன்றும்......தெய்வ வடிவாகி' 30, 31 இங்கே, முருகக் கடவுளைப் போற்றத் தொடங்கிய ஆசிரியர், சிவபெருமானுக்குரிய அனைத்தையும் முருகக் கடவுள் மேலேற்றிக் கூறுகின்றார். ஆகவே, முருகக் கடவுளும் சிவபெரு மானும் வேறு அல்லர் என்பதாம். இவ்வுண்மை பற்றியே பதிநூல்களெல்லாம் '**சிவனே குகன்; குகனே சிவன்**' எனக் கூறும்; இதனை, "ஆதலின் நமது சத்தி அறுமுகன் : அவனும் யாமும், பேதகம் அன்றால் ; நம்போற் பிரிவிலன்; யாண்டும் நின்றான்" எனவரும் **கந்தபுராணம்** - திருவிளையாடல் 19-ஆம் திருவிருத்த அடிகளால் அறிக.

உள் நின்று - புறத்தே தோன்றாமல் உயிரறிவிலேயே விளங்கி. ஒருமலத்தார்-ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞான கலர் ; (விஞ்ஞான+அகலர்.) இவர் விஞ்ஞானத்தாலே கலா சம்பந்தமற்றவர். விஞ்ஞானம் - மேலான அறிவு; அகலர் - கலையற்றவர். இவர்க்கு எடுத்த பிறவியன்றி வேறு பிறவி இல்லை. இறைவன் விஞ்ஞானகலருக்கு அருள்புரியும் முறை மையை, "முத்திதரும் - நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும், அந்நிலையே உள்நின்(று) அறுத்தருளி" எனவரும் **போற்றிப் பஃறொடை** 60-ஆம் கண்ணியாலும், "வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுண ருள்ளந்தோறும், சென்றுளே யமுத

மூற்றுந் திருவருள் போற்றி" எனவரும் **திருவிளையாடற் புராணம்** கடவுள் வாழ்த்து 4-ஆம் பாடல் அடியினுலும் உணரலாம்.

ஆணவமான படலம், மால்விடை: உருவகங்கள். அடிஞானத்தால், இங்கு அகரச் சுட்டு வருவிக்கப்பட்டது. வாய்த்த அனைய என்பது வாய்த்தனைய என விகாரப்பட்டது. 'மின்னிடத்துப் - பூத்த பவளப் பொருப்(பு) ஒன்று வெள்ளி வெற்பில், வாய்த்தனைய'-இஃது **இல்பொருளுவமைஅணி** ஆகும்.

**சிவபெருமான் ஆன்மாக்களுடன் அத்துவிதமாக நின்று, அடிமைகொண்டு முத்தி அடையுமாறு செய்தல்**

—பெருகியெழு

33. மூன்(று)அவத்தை யுங்கழற்றி முத்தருட னேஇருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்துத்—தோன்றவரும்

34. யானெனதென்(று) அற்ற இடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக—ஞானம்

35. திருவுருவா இச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா—இருநிலமே

36. சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே! எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே!

**இ-ள்:** பெருகி எழும் - மிகுந்து தோன்றுகின்ற, மூன்று அவத்தையும் கழற்றி - மூன்றவத்தைகளையும் நீக்கி, முத்தருடன் இருத்தி - சீவன் முத்தர்களுடனே சேர்த்து, ஆன்ற பரமுத்தி - மேலான பரமுத்தியை, அடைவித்து - அடையுமாறு செய்து, தோன்றவரும் - (வெளிப்படையாய்த்) தெரியும்படி வருகின்ற, யான் எனது என்று அற்ற இடமே - யான் எனது எனக் கருதுதல் நீங்கிய இடமே, திருவடி ஆ(க) - திருவடியாகவும், பரானந்தம் மோனம் - சிவானந்தத்தைத் தருகின்ற மௌனமே, முடி ஆக - திருமுடியாகவும், ஞானம் - ஞானமே, திரு உரு ஆ(க) - திருமேனியாகவும், இச்சை செயல் அறிவு - இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்திகளே, கண் ஆ(க)

- (முக்)கண்களாகவும், அருள் அதுவே - கருணையே, செம் கை அலர் ஆ(க)-சிவந்த கைம்மலராகவும், இருநிலமே - பெரிய பூவுலகமே. சந்நிதி ஆ(க) - சந்நிதானமாகவும், நிற்கும் - (கொண்டு) விளங்கும், தனிச் சுடரே - ஒப்பற்ற சோதியனே! எ உயிர்க்கும் - எவ்வுயிரிடத்திலும், பின்னம் அற - வேறுபாடின்றி, நின்ற-நிற்கின்ற, பெருமானே-பெருமையையுடையவனே! எ-று.

**விளக்கம் :** **அவத்தை** - தத்துவங்களோடு கூடிச் சகல விஷயங்களையும் ஆன்மா அறிந்து பற்றி அனுபவிக்கின்ற நிலை. **மூன்றவத்தை** – கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என்பன; இவற்றைக் **காரணவத்தைகள்** எனவும் வழங்குவர். **கேவலாவத்தை** - ஆன்மா ஆணவமலத்தோடு மாத்திரம் கூடி, இச்சா ஞானக் கிரியைகள் சிறிதும் விளக்கமுறாது கிடக்கும் நிலை; இது, கண்ணனது இரவின் இருளிலே ஒளியின்றி விழித்திருத்தல் போன்றது என்பர். **சகலாவத்தை** - ஆன்மா தனு கரணங்கள் முதலியவற்றைப் பெற்று, இச்சா ஞானக் கிரியைகள் சிறிது விளக்கமுற்றிருக்கும் நிலை; இஃது, இரவின் இருளில் மூழ்கிக்கிடந்த கண்ணனது விளக்கொளியால் இருள் நீங்கப்பெற்றுப் பல பொருள்களைக் காணுதல் போன்றது என்பர். **சுத்தாவத்தை** - பஞ்சமலங்களும் பிறவியும் நீங்கி ஆன்மா வியாபக அறிவு எய்தியிருக்கும் நிலை: இஃது இரவில் இருளோடும் விளக்கொளியோடும் கூடியிருந்த கண்ணனது சூரியோதயத்தில் கிரணங்களோடு கூடிய சூரியனைக் காணுதல் போன்றது என்பர், இதனை, "கேவல சகல சுத்த மென்று மூன் றவத்தை" எனவரும் **சிவஞான சித்தியார்** - சுபக்கம் 227-ஆம் திருவிருத்தத்தால் உணரலாம்.

, **முத்தர்** – சீவன் முத்தர்; இவர் மெய்ஞ்ஞானந் தலைப்பட மலக்குற்றம் நீங்கிப் பிறவிக்கிடமின்றி இருப்பவர்; இல்லறத்துடன் இவர் இருப்பினும் தாமரையிலைத் தண்ணீர்போல் பற்றின்றித் திகழ்பவர். **பரமுத்தி** – சுத்தாத்துவிதப் பரமுத்தி; மேலான முத்தி: இது கரும்பு, தேன், பால், கனிரசம், கற்கண்டு, சர்க்கரை முதலியவற்றின் சுவையைக்காட்டிலும் இனிய சிவானுபவப் பேரின்பத்தை உயிரனுபவிக்க இறைவன்

அளித்து நிற்கும் நிலை. இதனை, "கனியி னுங்கட்டி பட்டக ரும்பினும், பனிம லர்க்குழற் பாவை நல்லாரினும், தனிமுடி கவித்தாளும் அரசினும், இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே" எனவரும் அப்பர் தேவாரத்தால் அறியலாம்.

யான் என்பது அகங்காரம். செருக்கு : இஃது அகப்பற்று கும். எனது என்பது மமகாரம், ஆசை : இது புறப்பற்றுகும். யான் எனது எனக் கருதுதற்குக் காரணம் அறியாமையாகிய மயக்கமாம். "யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்(கு), உயர்ந்த உலகம் புகும்" என்பது திருக்குறள் 346. யான் எனது என்பன அற்றாலன்றித் திருவடி உண்மை விளங்காது ஆதலால், 'யான் எனது என்று அற்றவிடமே திருவடியா' எனக் கூறப்பெற்றுள்ளது.

ஞானம் திருவுருவா : "ஆணவ மகன்ற சுத்த அறிவல்லால் உருவ மில்லாத், தாணு" என்பது திருவானைக்காப் புராணம். இயங் குயிர், நிலையுயிர் ஆகிய இரண்டைக் குறிக்கவே 'எவ்வுயிர்க்கும்' என்றார். "பின்னமற நின்றபெருமானே" என்றது, இறைவன் உயிர்களோடு, உடலும் உயிரும்போல ஒன்றாயும். கண்ணொளி யும் கதிரொளியும் போல வேறாயும், கண்ணொளியும் ஆன்ம அறிவும் போல உடனாயும் நிற்கும் சுத்தாத்துவித நிலையை. அத்துவிதம் - இறைவனும் ஆன்மாவும் ஒன்றுமன்றி, இரண்டு மன்றி நிற்கும் நிலை. சுத்தம் - மேன்மை. பின்னம்-வேறுபாடு.

முத்தருடனே, ஏ ; அசை. அற்றவிடமே, அருளதுவே, இருநிலமே, ஏ : மூன்றும் தேற்றம். ஞானம், அறிவு-இவற்றில் தேற்றேகாரங்கள் தொக்கன. அருளதுவே, அது : பகுதிப் பொருள் விகுதி. அற்ற இடமே திருவடி, பரானந்தம் முடி, ஞானம் திருவுரு, இச்சை செயலறிவு கண், அருளதுவே செங்கை அலர் ; உருவகங்கள். கருதுதல் : சொல்லெச்சம்.

**முருகக்கடவுளின் திருவுருவ வருணனை**

—மின்னுருவம்

37. தோய்ந்தநவ ரத்நச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்தபிறைத்

38. துண்டம்இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட
39. பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்(கு)
அருள்பொழியுங் கண்மலரீ ராறும்—பருதி
40. பலவும் எழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும்
41. புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்

இ—ள்: மின் உருவம் தோய்ந்த – மின்னலின் ஒளியைக் கொண்ட, நவரத்நம் சுடர் மணியால் – ஒன்பது வகை இரத்திரனங்களாகிய ஒளியுள்ள மணிகளோடு, பைம்பொன் செய்த–பசும் பொன்னாற் செய்யப்பட்ட, கிரணம் வாய்ந்த–கிரணங்களை வீசுகின்ற, மணி முடியும் – அழகிய (ஆறு) முடிகளையும், தேய்ந்த – (கலைகள்) குறைந்த, இரு மூன்று பிறை துண்டம் – ஆறு பிறைத் துண்டங்களை, நிரை தோன்ற – வரிசையாக விளங்கும்படி பதித்தனைய – பதித்தாற்போன்ற. புண்டரம் பூத்த நுதல்–திரிபுண்டரம் பொருந்திய நெற்றிகளில் (அணிந்த), பொட்டு அழகும் – பொட்டுக்களின் அழகினையும், பருவம் விண்ட – உரிய காலத்தில் மலர்ந்த. புண்டரிக மலர் – (செந்) தாமரை மலர்கள். பன்னிரண்டு பூத்தாங்கு – பன்னிரண்டு பூத்தாற் போல (க்காணப்படும்), அருள் பொழியும் – திருவருளைப் பொழிகின்ற, கண் மலர் ஈர் ஆறும் – கண் மலர்கள் பன்னிரண்டினையும், பருதி பலவும் எழுந்து – சூரியர்கள் பன்னிருவரும் தோன்றி, சுடர் பாலித்தாற் போல – ஒளியை வீசினாற் போல, குலவும் – விளங்குகின்ற, மகரம் குழையும் - (பன்னிரண்டு) மகர குண்டலங்களையும், நிலவு உமிழும் – நிலவை(ப் போல ஒளி) வீசுகின்ற, புன்முறுவல் பூத்து – புன் சிரிப்புத் தோன்றப் பெற்று, அலர்ந்த – மலர்ந்த, பூ குமுதச் செவ்வாயும் – அழகிய செவ்வல்லி மலர் போன்ற சிவந்த வாயினையும், சென்ம விடாய் – பிறவித் துன்பத்தை, தீர்க்கும் – நீக்கி அருளுகின்ற. திருமொழியும் – திருவாக்கினையும் எ – று.

**விளக்கம் :** நவரத்நம் – கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்னும் ஒன்பது வகை மணிகள். பிறைத்துண்டம் – பிறைச் சந்திரன்; துண்டம் – துண்டு; பிளவு. புண்டரம் – திரிபுண்டரம்; திருநீற்று முக்குறித் தொகுதி. பருவமலர் – நாள்மலர்; அன்று அலர்ந்த மலர். பருதிபல – பன்னிரு சூரியர்; அவர் தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்துரு, துவட்டா என்போர். பருதி - பரிதி - வட்ட வடிவாயுள்ளது; சூரியன். பரிதி என்றும் பாடம். மகரம் – முதலை; மகரக் குழை – முதலை வடிவாகச் செய்யப்பட்ட காதணி. மகரம் ஒரு வகை மீனுமாம். விடாய் – களைப்பு; துன்பம். திருமொழி – உபதேச மொழியுமாம்.

பதித்தனைய, புண்டரம் பூத்த என்பவற்றைத் தனித் தனியே நுதலுக்கு அடைமொழியாக்குக. கண்மலர்: உருவகம். நிலா என்பது நிலவு என ஆயிற்று. 38, 39, 40–ஆம் கண்ணிகள் உவமை அணிகள்.

### முருகக்கடவுளது திருமுகங்களின் செயல்கள்

—வின்மலிதோள்

42. வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்

43. ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்

44. வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்

45. பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்

46. போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும்—தாகமுடன்

47. வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்

இ - ள்: வில் மலிதோள் - விற்படை தாங்கிய தோள்களை யுடைய, வெம் அசுரர் - கொடிய அசுரர்கள், போற்று இசைக்கும் - துதித்துப் புகழும், வெம் சூரனை தடிந்து - கொடிய சூரபன்மனைக் கொன்று, தெவ்வர் உயிர் சிந்தும்-(மற்றுமுள்ள) பகைவர்களுடைய உயிரைப் போக்கின, திருமுகமும் - வீர மிகுந்த) திருமுகமொன்றும், எவ்வுயிர்க்கும் - (மலபக்குவமடைந்த) எல்லாவுயிர்களுக்கும், ஊழ்வினையை மாற்றி - முன் செய்வினையைப் போக்கி, உலவாத பேர் இன்ப வாழ்வு தரும் - (என்றும்) அழியாத பேரின்பப் பெருவாழ்வைத் தருகின்ற, செய்ய மலர் முகமும் - சிவந்த தாமரை மலர்போன்ற திருமுகமொன்றும், சூழ்வோர் - தன்னை வணங்குவோர், வடிக்கும் - கற்றுத் தெளிகின்ற, பழ மறைகள் - பழமையான வேதங்கள், ஆகமங்கள் - சிவாகமங்கள், யாவும் - (ஆகிய) எல்லாவற்றையும், முடிக்கும் - (ஐயமின்றி) முற்றுப் பெறச் செய்யும், கமல முகமும் - தாமரை மலர்போன்ற திருமுகமொன்றும், விடுத்து அகலா - (உயிர்களை) விட்டு நீங்காத, பாசம் இருள் துரந்து - ஆணவ மலமாகிய இருளைப்போக்கி, பல் கதிரின் - பல சூரியர்கள் (ஒருங்கு திரண்டாற்) போல, சோதிவிடும் - ஒளி வீசுகின்ற, வாசம் மலர் வதனம் மண்டலமும் - மணம் பொருந்திய தாமரை மலர்போன்ற வட்டமான திருமுகமொன்றும், நேசமுடன் - அன்புடன், போகம் உறும் வள்ளிக்கும் - போகத்தை அனுபவிக்கின்ற வள்ளி நாயகியார்க்கும், புத்தேளிர் பூங்கொடிக்கும் - தெய்வயானை யம்மையார்க்கும், மோகம் அளிக்கும் - ஆசையூட்டுகின்ற, முகமதியும் - சந்திரன் போன்ற (குளிர்ந்த) திருமுகமொன்றும், தாகமுடன் அடியில் வந்து சேர்ந்தோர் - (திருவருளைப்பெறும்) ஆசையுடன் (தம்) திருவடிகளில் (தஞ்சமென) வந்து அடைந்தோர், மகிழ - மகிழும்படியாக, வரம் பலவும் தந்து அருளும் - பல வரங்களையும் கொடுத்தருளுகின்ற, தெய்வ முகத் தாமரையும் - தெய்வத் தன்மை பொருந்திய தாமரை மலர்போன்ற திருமுக மொன்றும் (ஆக ஆறு திருமுகங்களையும்) எ - று.

**விளக்கம்:** அசுரர் - அமிர்தம் உண்ணுதவர்கள்; இராக்கதர். ஊழ்வினை - முன்வினை; பிறவிக்குக் காரணமான சஞ்சித

வீணை. சூழ்வோர் - ஆராய்வோர்; மெய்யடியார்கள். வடிக்கும் - தெளிவிக்கப்படுகின்ற அல்லது நன்கு பொருளைத் தெளிந் தெடுக்கின்ற எனினுமாம். 'படிக்கும்' என்றும் பாடம். படிக்கும்-(இடைவிடாமல்) ஓதுகின்ற. பழமறைகள் - இருக்கு முதலிய வேதங்கள். ஆகமங்கள் - காமிகம்முதலிய சிவாக மங்கள். **ஆகமம்** - (ஆ - ஞானம், க - மோட்சம், ம - மலநாசம் ஆகவே) ஆன்மாக்களுக்கு மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுத்து மோட்சத்தை அடைவிப்பது. புத்தேளிர் பூங்கொடி - தேவர்களது அழகிய கொடி போல்பவள்; தெய்வயானை யம்மையார். **தாகம்** - விரும்பியதைப் பெறக் கருதும் அவா. இங்குக் கூறப்பெற்ற ஆறு திருமுகங்களின் செயல்களை, "மாயிருள் ஞாலம் மறுவின்றி.........மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே" எனவரும் **திருமுருகாற்றுப்படை** 91-102-ஆம் அடிகளாலும் அறியலாம்.

பல் கதிரின்: இன்: உவமவுருபு.

## முருகக்கடவுளது திருக்கரங்களின் செயல்கள்

—கொந்தவிழ்ந்த

48. வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்—ஆரமுதம்

49. தேவர்க்(கு) உதவுந் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும்—ஓவாது

50. மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும்—மார்பகத்தில்

51. வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும்—மொய்த்த

52. சிறுதொடிசேர் கையு(ம்)மணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசமர் அங்குசஞ்சேர் கையும்—தெறுபோர்

53. அதிர்கே டகஞ்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்குங் கரமும்

இ - ள்: கொந்து அவிழ்ந்த - கொத்தாக மலர்ந்த, வேரி கடம்பும் - தேனையுடைய கடப்ப மலரும், விரை குரவும்-மணத்தையுடைய குரா மலரும், பூத்து அலர்ந்த - மலர்ந்து விளங்குகின்ற, பாரம்-பெரிய, புயசயிலம் பன்னிரண்டும்-மலைபோன்ற பன்னிரண்டு தோள்களையும், ஆர் அமுதம் - அருமையாகிய அமுதத்தை, தேவர்க்கு உதவும் திருக்கரமும் - தேவர்களுக்கு அளித்தருளுகின்ற திருக்கரமொன்றும், சூர் மகளிர் - தேவ மகளிர், மேவ - விரும்ப, குழைந்து அணைந்த மென் கரமும் - இளகித் தழுவிய மெல்லிய திருக்கரமொன்றும், ஓவாது மாரி பொழிந்த - இடைவிடாமல் மழை பெய்வித்தருளுகின்ற, மலர்க் கரமும் - தாமரை மலர்போன்ற திருக்கரமொன்றும், பூ தொடையல் சேர அணிந்த திருக்கரமும்-பூமாலைகளை ஒருங்கே யணிந்த திருக்கரமொன்றும், மார்பு அகத்தில் வைத்த கரதலமும் - (தனது) திருமார்பின்மீது வைத்துக்கொண்டிருக்கும் திருக்கரமொன்றும், வாமம் மருங்கில் கரமும் - இடையின் இடப்பக்கத்தில் (வைத்தருளிய) திருக்கரமொன்றும், குறங்கில் உய்த்த ஒரு கரமும் - (திருத்) தொடையின்மேல் வைத்தருளிய ஒப்பற்ற திருக்கரமொன்றும், மொய்த்த சிறு தொடி சேர் கையும் - (ஓசை) சூழ்ந்த வீரவளைகள் அணிந்த திருக்கரமொன்றும், மணி சேர்ந்த தடம் கையும் - மணி பொருந்திய விசாலமான திருக்கரமொன்றும், கறுவு சமர் அங்குசம் சேர் கையும் - கோபத்துடன் போர் செய்தற்கு அங்குசம் என்னும் படையினைத் தாங்கிய திருக்கரமொன்றும், தெறு போர் அதிர் கேடகம் சுழற்றும் அம் கைத்தலமும் - (பகைவரை) அழிக்கின்ற போரில் அதிர்ச்சியுடன் கேடகம் என்னும் படையினைச் சுழற்றுகின்ற அழகிய திருக்கரமொன்றும், கதிர் வாள் விதிர்க்கும் கரமும் - ஒளி வீசுகின்ற வாட்படையினை அசைக்கும் திருக்கரமொன்றும் (ஆகப் பன்னிரண்டு திருக்கரங்களையும்) எ - று.

**விளக்கம்:** வேரி - மணமுமாம். புயசயிலம் என்பதற்கேற்பக் கடம்பும் குரவும் அலர்ந்த எனக் கூறினார். ஆரமுதம்-நிறைந்த அமுதமுமாம். அமுதம் - தேவாமிர்தம்; சாவா மருந்து. சூர் மகளிர்-கண்டு அஞ்சத்தக்க தெய்வப் பெண்கள். சூர் - அச்சம். தொடையல் - தொடுக்கப்படுவது; மாலை.

வாமம் - இடப்பக்கம்; அழகுமாம். மருங்கு - மருங்குல்; இடை. தொடி - வீரவளை. 'மொய்த்த சிறு துடிசேர்' என்ற **பாடத்திற்கு** வலிய சிறிய உடுக்கை பொருந்திய என்று பொருள் கொள்ளுதலுமாம். [துடி - உடுக்கை; இடை சுருங்கிய பறை.] மணி - அக்கமணி; உருத்திராக்கமணி எனினுமாம். கறுவு - தணியாக் கோபம். அங்குசம் - (யானையைச் செலுத்துதற்குரிய) தோட்டி என்னும் படை. அதிர் - நடுக்கமுமாம். கேடகம் - பாதுகாப்புப் படை.

இங்குக் கூறப்பெற்ற பன்னிரு திருக்கரங்களின் செயல்களை, "விண்செலல் மரபின் ஐயர்க் கேந்திய(து), ஒரு கை..............ஆங்கப், பன்னிருகையும் பாற்பட இயற்றி" எனவரும் **திருமுருகாற்றுப் படை** - 107-118-ஆம் அடிகளாலும் அறியலாம்.

கொத்து என்பது கொந்து என மெலிந்து நின்றது; மெலித்தல் விகாரம். குறங்கில் உய்த்த என மாற்றுக. பூத்தலர்ந்த ; ஒரு பொருட் பன்மொழி.

**முருகக்கடவுளின் அலங்காரச் சிறப்பு**

—முதிராத

54. கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும்—பைம்பொற்

55. புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணுங் கச்சை அழகும்—திருவரையும்

56. நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத்(து) அணிந்த பரிபுரமும்—சோதி

57. இளம்பருதி நூறா யிரங்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவும்—உளந்தனிற்கண்(டு)

58. ஆதரிப்போர்க்(கு) ஆருயிராய் அன்பரகத் தாமரையின்
மீதிருக்குந் தெய்வ விளக்கொளியே!

இ – ள்: முதிராத – இளமைத் தன்மையுள்ள, கும்பம் – குடம்போன்ற, முலை–தனங்களும், செவ்வாய் – சிவந்த வாயும், கொடி இடையார்–கொடிபோல நுடங்கும் இடையுங் கொண்ட தேவ மகளிர், வேட்டு – விரும்பி, அணைந்த – தழுவிய, அம்பொன் – அழகிய பொன்னாலும், மணி – இரத்தினங்களாலும் (செய்யப்பட்ட), பூண் – ஆபரணங்களை (அணிந்த), அகல் மார்பும் – அகன்ற மார்பினையும், பைம்பொன் புரிநூலும் – பசிய பொன்னாற் செய்த பூணூலையும், கண்டிகையும் – உருத்திராக்க மாலையினையும், பூம் பட்டு உடையும் – பூத்தொழில் அமைந்த பட்டாடையினையும், அரைஞாணும் – அரைநாணும், கச்சை அழகும் – அரைக் கச்சையின் அழகும் (பொருந்திய), திரு அரையும் – திருவிடையினையும், பாதத்து அணிந்த – திருவடிகளிலே அணிந்துள்ள, நாதக்கழலும் – ஒலியைச் செய்யும் வீரக் கழலினையும், நகு மணி பொன் கிண்கிணியும் – விளங்குகின்ற மணிகள் (பதித்த) பொன்னாலாகிய சதங்கையினையும், பரிபுரமும்–சிலம்பினையும், சோதி – ஒளியையுடைய, நூறு ஆயிரம் கோடி இளம் பருதிபோல – இலட்சங்கோடி உதய சூரியர்கள் (தோன்றினாற்) போல, வளம் தரு தெய்வீக வடிவும் – ஒளி மிகுந்த தெய்வத்தன்மை பொருந்திய திருவடியினையும், உளந்தனில் கண்டு–உள்ளத்திற் கண்டு, ஆதரிப்போர்க்கு – அன்பு செய்வோர்க்கு, ஆர் உயிர் ஆய் – அரிய உயிராய், அன்பர் – (அவ்) வன்பர்களின், அகத் தாமரையின்மீது இருக்கும் – இதய கமலத்தில் எழுந்தருளியிருக்கும், தெய்வ விளக்கு ஒளியே – தெய்வத்தன்மை பொருந்திய விளக்கொளி போன்றவனே! எ – று.

**விளக்கம்:** கும்பம் – யானை மத்தகமுமாம். கொடியிடையார் – தெய்வயானை, வள்ளி என்னும் இருவருமாம். பூம் பட்டு – அழகிய பட்டுமாம். அரைஞாண் – இடுப்பில் கட்டும் கயிறு. கச்சை – இடுப்பில் கட்டும் கச்சைப்பட்டை. நாதக் கழல் – நாததத்துவமாகிய கழல் எனினுமாம். கழல் – வீரர் வலக்காலில் அணியும் ஓர் ஆபரணம். கிண்கிணி – கிண் கிண் என்று ஒலிப்பது; சதங்கை. பருதி – பரிதி; சூரியன். பரிதி என்றும் பாடம்.

முருகக் கடவுள் தெய்வீகத் திருவுருவமுடைய ராதலின், '**தெய்வீக வடிவு**' என்றார்: "தெய்வஞ் சான்ற திறல் விளங் குருவின்" என்பது **திருமுருகாற்றுப்படை-287**-ஆம் அடி. முருகப் பெருமானின் திருவடிவு, நூறாயிரங்கோடி உதய சூரியர்கள் தோன்றினாற்போலப் பேரொளியுடையதாதலின், "**இளம் பருதி நூறாயிரங் கோடி போல, வளர்ந்தருதெய் வீக வடிவு**" என்றார்: "உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு, பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்(கு)" என்பது **திருமுருகாற்றுப்படை-1, 2**; "சதகோடி சூரியர்கள் உதயமென......ஒரு சோதி வீசுவதும்" என்பது **திருப்புய வகுப்பு**: "விண்ணொடு மண்ணை விழுங்கி அருட்கதிர் விரியும் இளஞ் சுடரே" என்பது **முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்** – தாலப் பருவம் 8–ஆம் பாடல் அடி.

அன்பர் என்பதில் அகரச் சுட்டு வருவித்துரைக்கப் பட்டது. பட்டாடை, அரைஞாண், கச்சை பொருந்திய திருவரை எனவும், கழல், கிண்கிணி, பரிபுரம் அமைந்த பாதம் எனவும் கொள்க. 57–ஆம் கண்ணி **உவமையணி** ஆகும். பருதி-பரிதி; பண்பாகு பெயர்.

**முருகக்கடவுள் பற்பலவடிவாய் விளங்கும் நிலை**

—ஓதியஐந்(து)

59. ஓங்காரத் துள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே!—தாங்கரிய

60. மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்

61. ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த

62. கலையே அவயவமாக் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்!—பலகோடி

63. அண்டம் உருவாகி அங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் காரணமாய்த்—தொண்டுபடும்

64. ஆவிப் புலனுக்(கு) அறி(வு)அளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே!—மேவ

65. வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வே !மெய்ஞ் ஞானம்
தரும்அட்ட யோகத் தவமே!

இ – ள்: ஓதிய – (அறிஞரால்) சொல்லப்பட்ட, ஐந்து ஓங்காரத்து – ஐந்து (உறுப்புக்களையுடைய) பிரணவத்தின், உள் ஒளிக்கும் – உள்ளொளிக்கும், உள் ஒளியாய் – உள்ளொளியாய், ஐந்தொழிற்கும் நீங்காத – (படைப்பு முதலிய) ஐந்து தொழில்களையும் (செய்வதற்கு) நீங்காத, பேர் உருவாய்–(பிரமன் முதலிய ஐந்து) பெரியவடிவாய், நின்றோனே– நின்றவனே! தாங்கு அரிய – (பிறரால்) தாங்குதற்கு அருமையான, மந்திரமே சோரி ஆ(க) – மந்திராத்துவாவே இரத்தமாகவும், வான்பதமே மாமுடி (ஆக) – பெருமை பொருந்திய பதாத்துவாவே சிறந்த முடியாகவும், தொந்தம் உறும் – கட்டுள்ள, வன்னமே தொக்கு ஆக–வர்ணத்துவாவே தோலாகவும், பந்தனையால் ஒத்த – பாசத்தோடு கூடிய, புவனத்து உருவே உரோமம் ஆ(க) – புவனத்துவாவே உரோமமாகவும், தத்துவங்களே சத்த தாது ஆ(க) – தத்துவாத்துவாவே ஏனைய தாதுக்களாகவும், வைத்த கலையே அவயவம் ஆ(க) – (வரிசையாக) அமைக்கப்பெற்ற கலாத்துவாவே உறுப்புக்களாகவும், காட்டும் – (இங்கே) காட்டிய, அத்துவாவின் நிலையே வடிவம் ஆ(க) – அத்துவாவினது நிலையே வடிவமாகவும் (கொண்டு), நின்றோய் – நின்றவனே! பலகோடி அண்டம் உருவு ஆகி – பலகோடி அண்டங்களே திருமேனியாகவும், சராசரம் அங்கம் ஆய் – சராசரப் பொருள்களே உறுப்புக்களாகவும், கண்ட – (அறிவுடையோரால்) காணப்பட்ட, சத்தி மூன்று உட்கரணம் ஆய் – ஆய் (இச்சா ஞானக் கிரியா சத்திகள் என்னும்) மூன்று சத்திகளே அந்தக்கரணங்களாகவும் (கொண்டு), தொண்டு படும் – அடிமைத் தன்மை பொருந்திய, ஆவிப் புலனுக்கு அறிவு அளிப்ப – உயிர்களினது அறிவுக்கு அறிவாய் நின்று உணர்த்தும் பொருட்டு, ஐந்தொழிலும் ஏவி–(அதிரூக்கும) ஐந்து தொழில்களையுஞ் சங்கற்பித்து,

**தனி நடத்தும்** – ஒப்பின்றிச் செய்தருளுகின்ற, **எம் கோவே** – எம்முடைய தலைவனே! **மேவ வரும்** – பொருந்த வருகின்ற, **அட்ட மூர்த்தம் ஆம் வாழ்வே** – எட்டு வடிவோடு வாழ்கின்ற பெருமானே! **மெய்ஞ்ஞானம் தரும்** – உண்மையான ஞானத்தைத் தருகின்ற, **அட்ட யோகத் தவமே** – (இயமம் முதலிய) எட்டு அங்கங்களையுடைய யோகமாகிய தவத்தின் பயனே! எ – று.

**விளக்கம்:** ஐந்து ஓங்காரம் – அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து என்னும் ஐந்து உறுப்புக்களையுடைய பிரணவம். இதனை, "அகர உகர மகர விந்து நாதமாகிய அக்கரமைந்து........." எனவரும் **சிவஞான தீபம்** – 122-ஆம் செய்யுளடியால் அறிக. இவற்றுள் அகர, உகர, மகரங்களாக விரிந்தபோது மூன்றெழுத்தாயும், அகர உகர மகரம் இம்மூன்றுங் கூடி '**ஓம்**' என்று ஒலிக்கப்படும்போது நாதமாயும், ஓம் என்று வரிவடிவு கொள்ளும்போது விந்துவாயும் விளங்கும். முதல் மூன்றெழுத்தும், ஒலி வடிவும், வரிவடிவும் கூடியபோது ஐந்தாம் என்க. பிரணவம் **சமட்டிப் பிரணவம், வியட்டிப் பிரணவம்** என இருவகைப்படும். சமட்டிப் பிரணவம் 'ஓம்' என நிற்பது. வியட்டிப் பிரணவம் அகர, உகர, மகர, விந்து, நாதம் என நிற்பது. **சமட்டி** – தொகுத்துச் சொல்வது. **வியட்டி** – பகுத்துச் சொல்வது. ஓங்காரத் துள்ளொளிக்கு முள்ளொளியாய்: "ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகனுருவங் கண்டு" என்பது **கந்தரலங்காரம்** 55-ஆம் பாடல் அடி. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் முறையே, பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐந்து மூர்த்திகளாய் இருந்து நடாத்துகின்ற முதல்வன் நீயே என்பார், "**ஐந்தொழிற்கும் நீங்காத பேருருவாய் நின்றோனே**" என்றார்.

**சத்ததாது** – இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, நரம்பு, என்பு, தோல் என்னும் எழுவகைத் தாதுக்கள். முன்னர் சோரி, தொக்கு என்னும் இரண்டு தாதுக்களைக் கூறினமையின், இங்கே அவை ஒழிந்த ஏனைய ஐந்து தாதுக்களையே கொள்க. ஈண்டு அத்துவாக்களை முருகக் கடவுளுக்கு வடி

வாகக் கூறியது அவற்றோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்கும் அத்துவித இயைபு நோக்கியாம். இறைவன் அத்துவாக்களை வடிவாக உடையவன் என்பதை, "அத்துவா மூர்த்தியாக அறைகுவ தென்னை என்னின்......மறைகளெல்லாம்" எனவரும் **சிவஞான சித்தியார்** - சுபக்கம் 76-ஆம் திருவிருத்தத்தால் அறிக. ஆறு அத்துவாவின் தொகுப்பினையே, "**அவயவமாக் காட்டும் அத்துவாவின் நிலை**" என்று கூறப்பெற்றது. (63-64 கண்ணிகள்) - இவ்வாறு இறைவன் நின்று அதிசூக்கும ஐந்தொழிலைச் செய்கிறான் என்பதை "உலகமே உருவமாக யோனிகள்" எனவரும் **சிவஞான சித்தியார்** - சுபக்கம் 237-ஆம் திருவிருத்தத்தாலும் அதன் உரையாலும் அறிக. உட்கரணம்-அந்தக்கரணம்: அகக் கருவி.

**சரம்** - இயங்குதிணை; சங்கமம். **அசரம்** - நிலைத்திணை; தாவரம். உயிர்களெல்லாம் இறைவனுக்கு அடிமை ஆதலின் "**தொண்டு படும் ஆவி**" என்றார். இறைவன் அறிவித்தால் தான் உயிர் அறியும் என்பார், "**அறிவளிப்ப**" என்றார். **அட்ட மூர்த்தம்** - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் என்னும் எட்டுருவோடு கூடிய வடிவம். இறைவன் அட்ட மூர்த்தமாக விளங்குபவன்: "நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்" என்பது **திருவாசகம்** - திருத்தோணோக்கம் 5-ஆம் திருப்பாடல் அடிகள்.

உண்மை யறிவைத் தருகின்ற எண்வகை யோகத் தவப் பயன் என்பார், "**மெய்ஞ்ஞானம் தரும் அட்டயோகத் தவமே**" என்றார். பாலுடன் நெய் கலந்துள்ளது போலவே ஞானத்துடன் யோகம் கலந்துள்ளது என்பதை மக்கள் அறியாமல், யோகம் வேறு ஞானம் வேறு என இடருறுவர் என்பதைக் கருதியே ஆசிரியர், "**மெய்ஞ்ஞானம் தரும் அட்டயோகம்**" என அடைகொடுத்துக் கூறினார்,

**அட்டயோகம்** - எட்டு வகையான யோகமுறை: அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவற்றுள், கொல்லாமை,

பொய் கூறாமை, கள்ளுண்ணாமை, களவு செய்யாமை, பிறர் மனை விழையாமை முதலியன **இயமமாம்**. கற்க வேண்டுவன கற்றல், பெற்றதற்கு உவத்தல், ஆசாரங்கொள்ளல், தெய்வ வழிபாடு, தவமியற்றல் முதலியன **நியமமாம்**. கோமுகாசனம், பதுமாசனம், வீராசனம், சிங்காசனம், மயூராசனம், சுகாசனம் முதலியன **ஆசனமாம்**. பிராண வாயுவை இரேசக பூரக கும்பகஞ் செய்தல் **பிராணாயாமமாம்**. ஐம்பொறிகள் புறத்தில் செல்லாதபடி அவற்றைத் தன்வசப்படுத்தி உள் நோக்கல் **பிரத்தியாகாரமாம்**. இதயம், நெற்றி, கபாலம் முதலியவற்றுள் ஏதேனுமொன்றில் எப்பொழுதும் மனத்தினை வைத்து ஒரு வழிப் படுத்தல் **தாரணையாம்**. மனநிலை திரியாமல் பரம் பொருளைச் சோகம்பாவனை புரிதல் **தியானமாம்**. துவாதசாந்தத்தில் பரசிவமூர்த்தியை நிட்களமாகத் தியானித்து அப்பர சிவத்துடன் அத்துவிதமாகக்கலந்து இன்பத்தை அனுபவித்தல் **சமாதியாம்**. 63-ஆம் கண்ணியில், 'சத்தி மூன்று கரணமாய்' என்றும் பாடம்.

மந்திரமே, பதமே, வன்னமே, உருவே, தத்துவங்களே, கலையே, ஏ: தேற்றங்கள். மந்திரமே சோரி, பதமே முடி, வன்னமே தொக்கு, புவனத்துருவே உரோமம், தத்துவங்களே தாது, கலையே அவயவம்: உருவகங்கள்.

### முருகக்கடவுளின் தசாங்கம்

—பருவத்(து)

66. அகலாத பேரன்(பு) அடைந்தோர் அகத்துட்
புகலாகும் இன்பப் பொருப்பும்—சுகலளிதப்

67. பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்பம்

68. எல்லாங் கடந்த இருநிலத்துட் போக்குவர(வு)
அல்லா(து) உயர்ந்த அணிநகரும்—தொல்லுலகில்

69. ஈறும் முதலுமகன்(று) எங்குநிறைந்(து) ஐந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமும்—ஏறுமதம்

70. தோய்ந்து களித்தோர் துதிக்கையினுற் பஞ்சமலம்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ

71. பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையும்—காரணத்துள்

72. ஐந்தொழிலும் ஓவா(து) அளித்துயர்த்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும்—சந்ததமும்

73. நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும்—தேக்கமழ்ந்து

74. வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே!

**இ - ள்:** பருவத்து அகலாத - பக்குவத்தில் நீங்காத, பேர் அன்பு அடைந்தோர் அகத்துள் - பேரன்பையுடையவர்கள் உள்ளத்தில், புகல் ஆகும் - புகுதற்கரிய, இன்பப் பொருப்பும்-ஆனந்த மலையும், சுக லளிதம் - சுக மயமான அழகிய, பேர் இன்பம் வெள்ளப் பெருக்கு ஆறும்-பேரானந்த வெள்ளமாகிய ஆறும், பீதானம் - மேலான இடத்தில், தேர் - தெளிந்த, இன்பம் நல்கும் திருநாடும் - ஆனந்தத்தைக் தருகின்ற அழகிய நாடும், பார் இன்பம் எல்லாம் கடந்த-உலக இன்பங்களையெல்லாம் கடந்து நின்ற, இரு நிலத்துள்-மேலான வீட்டுலகின்கண், போக்கு வரவு அல்லாது உயர்ந்த அணி நகரும் - போக்குவரவின்றி உயர்ந்த அழகிய நகரமும், தொல் உலகில்-பழமையாகிய உலகத்தில், முதலும் ஈறும் அகன்று - ஆதியும் அந்தமுமின்றி, எங்கும் நிறைந்து - எல்லாவிடத்தும் நிறைந்து, ஐந்து எழுத்தைக் கூறி நடாத்தும் குரகதமும் - ஐந்தெழுத்தைக் கூறிச் செலுத்துகின்ற குதிரையும், ஏறு மதம் தோய்ந்து - (பழமையாய்) அமைந்துள்ள சமயங்களில் அழுந்தி, களித்தோர் - (அது அதுவே பொருளெனக் கண்டு) மகிழ்ச்சியடைந்தோர்கள், துதிக்கையினுல் - (அச்சமயங்களையெல்லாம் கடந்து நின்ற தன்னைத்) தோத்திரஞ் செய்வதனுல், பஞ்சமலம் காய்ந்த சிவஞான கடாக் களிறும் - (அவர்களு

டைய) ஐந்து மலங்களையும் நீக்கிய சிவஞானமாகிய மதயானை யும், வாய்ந்த சிவ பூரணத்துள் பூரணம் ஆம் - பொருந்திய சிவ வியாபகத்துள் அழுந்திய, போதம் - (சிவ) ஞானமே• புது மலர் ஆ(க)-புதிய மலராகக் கொண்டு, நார் அகத்துள் கட்டும் நறும் தொடையும் - அன்பு நிறைந்த உள்ளத்துள் கட்டப்படுகின்ற நல்ல மணங்கமழும் மலர்மாலையும், காரணத் துள் ஐந்தொழிலும்-(தூல ஐந்தொழிலுக்குக்) காரணமாகிய (சூக்கும) ஐந்தொழிலையும், ஓவாது அளித்து உயர்ந்த வான்கொடியும் - இடைவிடாது செய்து உயர்த்திய மேலாகிய கொடியும், வந்த-(சுத்தமாயையினின்று) தோன்றிய, நவ நாதம் - புதுமையைத் தருகின்ற நாத தத்துவமாகிய. மணி முரசும் - அழகிய முரசமும், சந்ததமும் - எப்பொழுதும், நீக்கமின்றி - (விட்டு) நீக்குதலின்றி, ஆடி நிழல் - கண்ணாடி யில் நிழலை, அசைப்பான்போல் - (தான் ஆடி) அசைப்பவனைப் போன்று, புவனம் ஆக்கி அசைத்தருளும் - புவனங்களைத் தோற்றுவித்து இயங்கச் செய்கின்ற, ஆணையும் - (சங்கற்ப மாகிய) ஆட்சியும், (ஆகப் பத்து அரச உறுப்பினையும்), தேகமழ்ந்து வீசும்-தெய்வத்தன்மை பொருந்திவீசுகின்ற, பனுவல் - நூல்களைச் (செய்யும்), விபுதர் - அறிஞர்கள், தனித்தனியே பேசும் - தனித்தனியே (புகழ்ந்து) பேசுதற்குரிய, தசாங்கம் என பெற்றோனே - தசாங்கமாகக் கொண்டவனே! **எ - று.**

**விளக்கம் :** லளிதம் - அழகு. மீதானம் - மேலானவிடம்; தத்துவங்களெல்லாவற்றிற்கும் மேலான நிலை. இன்ப வெள் ளப் பெருக்காறு: "ஆனந்தங் காறுடையான் ஆறு" என்பது திருவாசகம்-திருத்தசாங்கம் 4. பரானந்த முத்தியைக் குறிக்கவே, **"போக்குவரவல்லாதுயர்ந்தஅணிநகர்"** என்றார்; **"போக்கும் வரவும்... கடந்தலவா இன்பம்"** என்றார் முன்னும் (கண்ணி-29). மதம்- சமயம், யானைக்குரிய மதம். துதிக்கையினால் - தோத்திரஞ் செய்வதனால், தும்பிக்கையினால் என்பது வேறொரு பொருள். "ஏறுமதம், தோய்ந்து......பஞ்சமலம்; காய்ந்த" மிகுந்த மதப் பெருக்கில் மூழ்கிக்களித்து ஒரு தும்பிக்கையினால் பஞ்சமலங் களையும் காய்ந்த எனினுமாம். **பஞ்சமலம்** - ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி என்பன.

நார்-அன்பு; மாலை கட்டுதற்குரிய நார் என்பது மற்றொரு பொருள்: "பூவுண்டு நாரொன்  றிலையான் றொடுத்துப் புனைவதற்கே" என்பது **மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை** 16-ஆம் "தொழுதகன்ற வன்பெனு நார் தொடுத்தலங்கல் சூட்ட" என்பது **திருவிளையாடற் புராணம்** - கடவுள் 17-ஆம் பாடல் அடி. நவம் - புதுமை. ஆடி - கண்ணாடி. புவனம் ஆக்கி அசைத்தருளும் ஆணை: "தன்வலி யாணை தாங்கி, மூவண்ண றன்சந்நிதிமுத் தொழில் செய்ய" என்பது **திருவிளையாடற் புராணம்** - கடவுள் 6-ஆம் பாடல் அடி. தேக்கமழ்ந்து – இனிமை பொருந்தி; அல்லது தேன் பரிமளித்து எனினுமாம்.

தசாங்கம் - (தச+அங்கம்) தேவர் முதலியோர்க்குரிய பத்துவகை உறுப்புக்கள்; அவை மலை, ஆறு, நாடு, நகர், குதிரை, யானை, மலை, கொடி, முரசு, ஆணை என்பன. இவ்வாறே தசாங்கத்தை **உமாபதி சிவாசாரியார் நெஞ்சுவிடு தூது** என்னும் நூலில் கூறியுள்ளார். **மாணிக்கவாசகர்**, தாம் அருளிய **திருவாசகம் - திருத்தசாங்கத்தில்** யானை, ஆணை என்னும் இரண்டினையும் நீக்கிப் பெயர், படை என்னும், இரண்டினையும் கொண்டுள்ளார். விபுதர் - புலவர்; அறிஞர். தனித்தனியே - தங்கள் தங்கள் அனுபவத்தை வெவ்வேறாக,

சிவஞானக் கடாக் களிறு: உருவகம். முதலும் ஈறும் என மாற்றுக. வெள்ளப் பெருக்கு: ஒரு பொருட் பன்மொழி. தே + கமழ்ந்து; தேன் + கமழ்ந்து = தேக்கமழ்ந்து.

### முருகக்கடவுளின் திருவவதாரம்

—தேசுதிகழ்

75. பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கட் பரஞ்சோதி—ஆங்கொருநாள்

76. வெந்தகுவர்க்(கு) ஆற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ(டு) அதோமுகமும்—தந்து

77. திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறிஆ(று) உய்ப்ப—விரிபுவனம்

78. எங்கும் பரக்க இமையோர்கண்(டு) அஞ்சுதலும்
பொங்குந் தழற்பிழம்பைப் பொற்கரத்தால்—அங்கண்

79. எடுத்தமைத்து வாயுவைக்கொண்(டு) ஏகுதிஎன்(று), எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்—அடுத்ததொரு

80. பூதத் தலைவ!கொடு போதிஎனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்(று)

81. அன்னவளுங் கொண்டமைதற்(கு) ஆற்றாள் சரவணத்திற்
சென்னியிற்கொண்(டு) உய்ப்பத் திருவுருவாய்—முன்னர்

82. அறுமீன் முலையுண்(டு) அழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற்

83. கன்னியொடுஞ் சென்(று)அவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்(டு) அவ்வுருவம் ஆறினையும்—தன்னிரண்டு

84. கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச்—செய்ய

85. முகத்தில் அணைத்(து)உச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த

86. வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்(து)
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே !

இ - ள்: தேசுதிகழ் - ஒளி விளங்குகின்ற, பூ கயிலை வெற்பில் - அழகிய கயிலைமலையில், புனைமலர் பூங்கோதை-தொடுக்கப்பட்ட அழகிய பூமாலையினை அணிந்த உமாதேவியாரை, இடப்பாங்கு உறையும் - (தம்முடைய) வாம பாகத்திலே வீற்றிருக்கப்பெற்ற, முக்கண் பரஞ்சோதி - மூன்று கண்களை உடைய மேலான சோதி வடிவாகிய சிவபெருமான், ஆங்கு ஒருநாள் - அவ்விடத்து ஒருநாள், வெம் தவர்க்கு ஆற்றாத- கொடிய அசுரர்களுக்கு எதிர் நிற்கலாற்றாத, விண்ணோர் முறைக்கு இரங்கி - தேவர்களின் முறையீட்டிற்கு இரக்கமுற்று, ஐந்து முகத்தோடு அதோமுகமும் தந்து - (தம்)

ஈசானம் முதலிய ஐந்து முகங்களோடு கீழ் நோக்கிய முகம் ஒன்றையுங் கொண்டு, திருமுகங்கள் ஆறு ஆகி - திருமுகங்கள் ஆறுகப்பெற்று, செம் தழல் கண் ஆறும் - செந்தழல் மய மாகிய ஆறு (நெற்றிக்) கண்களின் நின்றும், ஒருமுகமாய் தீப்பொறி ஆறு உய்ப்ப - ஒருங்கே ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்த, விரி புவனம் எங்கும் பரக்க - (அத் தீப் பொறிகள்) விரிந்த புவனங்களெங்கும் பரவ, இமையோர் கண்டு அஞ்சுதலும் - (அவற்றைத்) தேவர்கள் கண்டு பயப்பட வும், பொங்கும் தழல் பிழம்பை - (அதனையறிந்து) சீறுகின்ற (அத்) தீப்பொறியின் திரட்சியினை, பொன் கரத்தால் - (தம்) அழகிய கையால், அங்கண் எடுத்து அமைத்து - அவ்விடத்தி னின்றும் எடுத்து (அவற்றின் வேகத்தை) அடக்கி, வாயுவை கொண்டு ஏகுதி என்று - வாயுவேதனை நோக்கி (நீ இவற்றை) எடுத்திச் செல்லுதி என்று, எம்மான் கொடுத்து அளிப்ப - எம் மிறைவனாகிய சிவபெருமான் (அவனிடம்) கொடுத்தருள, மெல்ல கொடு போய் - (வாயுதேவனும் அவற்றை) மெல்லக் கொண்டுசென்று, அடுத்தது ஒரு பூதத்தலைவ - அடுத்து நிற்பவனாகிய அக்கினியை (நோக்கி) ஒப்பற்ற பூதங்களுக்குத் தலைவனாயுள்ள அக்கினி தேவனே! கொடு போதி என - (நீ இப் பொறிகளை எடுத்துச்) செல்வாயாக என்று கூறி(க் கொடுக்க), தீக் கடவுள் சீத பகீரதிக்குச் சென்று உய்ப்ப - (அக்கினி தேவன்) அவற்றைக் குளிர்ந்த கங்கையாற்றிற் கொண்டுபோய்ச் சேர்க்க, அன்னவளும் - அக்கங்கா தேவியும், போது ஒரு சற்று கொண்டு அமைதற்கு ஆற்றாள் - (அவற் றைச்) சிறிது நேரம் (தங்கிக்) கொண்டு இருப்பதற்கு வன்மையற்றவளாகி, சென்னியில் கொண்டு சரவணத்து உய்ப்ப - (தனது) சிரமேற் சுமந்து சென்று சரவணப் பொய் கையில் விடுக்க, திரு உருவாய் - (அத்தீப்பொறிகளாறும் ஆறு) திருவுருவங்களாய், முன்னர் - முதலில், அறுமீன் முலை உண்டு அழுது விளையாடி - கார்த்திகை மாதர் அறுவர் (அளித்த) முலைப்பாலையுண்டு அழுது விளையாடி, நறு நீர் முடிக்கு அணிந்த நாதன் - கங்கையை(ச் சடை) முடியில் தரித்த சிவபெருமான், குறுமுறுவல் கன்னியொடும் சென்று -

புன்சிரிப்பை யுடைய உமாதேவியாரோடும் சென்று, காதல் உரு அவட்கு காட்டுதலும் - (தனது) திருமகனுடைய திருவுருவத்தை அவளுக்குக் காண்பித்தலும், அன்னவள் கண்டு - அவ்வுமாதேவியார் கண்டு, அ உருவம் ஆறினையும் - அந்த ஆறு திருவுருவங்களையும், தன் இரண்டு கையால் எடுத்து - தன்னுடைய இரண்டு திருக்கரங்களாலும் எடுத்து, மெய் ஆறும் ஒன்ருக மேவுவித்து அணைத்து-ஆறு உடலினையும் ஒன்ருகச் சேர்த்துத் தழுவி, கந்தன் என பேர் புனைந்து - கந்தன் எனப் பெயரிட்டு, செய்ய முகத்தில் அணைத்து - செவ்விய முகத்திற் சேர்த்து, உச்சி மோந்து - உச்சி முகந்து, அகத்துள் மகிழ்பூத்து - திரு உள்ளத்தில் களிகூர்ந்து, முலைப்பால் அளித்து - (தனது) திரு முலைப்பாலை அளித்து சகத்து அளந்த வெள்ளை விடைமேல் - உலகத்தை அளந்த திருமாலாகிய வெண்மை நிறத்தையுடைய இடபத்தின்மீது (எழுந்தருளியிருக்கும்), விமலன் கரத்தில் அளித்து - சிவபெருமானது திருக்கரத்திற் கொடுத்து, உள்ளம் உவப்ப உயர்ந்தோனே - மன மகிழச் சிறப்புற்ருனே ! எ - று.

**விளக்கம்** : இடப்பாங்கு - இடது பக்கம், **முக்கண்** - சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று கண். தகுவர் - அசுரர்கள். முறை - முறையீடு; அது பகைவரால் எய்திய நலிவைக் கூறுதல். **ஐந்து முகம்** – ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐந்து முகங்கள்; இவற்றுள் ஈசானம் மேல் நோக்கியும், தற்புருடம் முதலிய நான்கும் முறையே கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்னும் திசைகளை நோக்கியும் இருக்கும். அதோமுகம் - கீழ்நோக்கிய முகம். இறைவனுடைய முக்கண்களில் வலக்கண் சூரியனும், இடக்கண் சந்திரனும், நெற்றிக்கண் அக்கினியுமாகலின், இங்கு நெற்றிக்கண் '**தழற்கண்**' எனப்பட்டது.

75-77-இக்கண்ணிகளில் இறைவன் தீப்பொறி உய்த்த செய்தியை," வந்திக்கு மலரோ ஞதி வானவர்.........திருமுக மாறுங்கொண்டான்", "......சிற்பரன் ருன்கொண் டுள்ள திருமுக மாறு......புலிங்கமொன் ருென்று தந்தான்" எனவரும் **கந்தபுராணம்** - திருவவதாரம்-43, 44-ஆம் செய்யுட்களால்

அறியலாம். இமையோர்-இமயவர்-கண் இமைத்தலில்லாதவர் ; தேவர். பிழம்பு - திரட்சி. அடுத்தது ஒரு பூதம் - வாயுவுக்கு அடுத்த பூதம் ; தீ. அதன் தலைவன் - தீக்கடவுள் ; அக்கினி தேவன். பகிரதி - பாகீரதி - பகீரதனால் கொண்டுவரப்பட்டவள் ; கங்கை. 77–80-இங்குக் கூறிய வரலாற்றைக் **கந்தபுராணம்** – திருவவதாரம்–45, 84, 85-ஆம் செய்யுட்களினால் அறியலாம்.

போது ஒரு சற்று - சிறிது நேரம். **சரவணம்** - சரவணப் பொய்கை ; நீல நிறத்தையுடைய தருப்பை வளர்ந்த பொய்கை. (சரவணம் - சரவனம். சரம் - நாணற் புல். வனம் – நீர்.) இதனை, நக்கீரர் **திருமுருகாற்றுப்படை** 253-ஆம் அடியில், " நெடும் பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை " என்றார். " நிவந்தோங் கிமயத்து நீலப் பைஞ்சுனை " என்பது **பரிபாடல்** அடி. " போதொரு சற்று, அன்னவளும் ......... சரவணத்தில் ......... உய்ப்ப"—இவ்வடிகளின் செய்தியினை, " அரனருள் முறையினை அறிந்து கங்கை தன் " எனவரும் **கந்தபுராணம்** – திருவவதாரம் 87-ஆம் செய்யுளால் அறிக.

அறுமீன் - கார்த்திகை மாதர் அறுவர். மீன் – மின்னுவது ; நட்சத்திரம். பின்னர் உமாதேவியார் அளித்த பாலையும் உண்டமையால் இங்கே, " **முன்னர் அறுமீன் முலையுண்டு** " என்றார். அறுமீன் முலையுண்டு அழுது ; " அறுவர் கொங்கை, விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழும், குருந்தை " என்பது **கந்தரலங்காரம்**-5. முருகக் கடவுள் சரவணப் பொய்கையில் தமது மாயையால் விரைந்து செய்த அற்புதத் திருவிளையாடலைக் குறிப்பிடவே, '**விளையாடி**' என்றார். இவற்றின் விரிவை, " துயிலவோருருவம்.........செய்தான்," " ஒருருத் தவழ......... புரிதலுற்றான்," ஆடவோ ருருவம்.........சிவன் மகன் புரிதலுற்றான் " எனவரும் **கந்தபுராணம்** - திருவவதாரம் 119, 120, 121-ஆம் செய்யுட்களால் அறியலாம்.

நறுநீர் - கங்கை. பகீரதன் வேண்டுகோளுக்கு இணங்கிச் சிவபெருமான் கங்கையைத் தன் சிரசில் அணிந்தார் ஆதலின், " **நறுநீர் முடிக்கணிந்த நாதன்** " என்றார். குறுமுறுவல் - புன் சிரிப்பு. கன்னி - உமாதேவியார். கன்னியாயிருத்தலின் உமா

தேவியாரைக் '**கன்னி**' என்றார்; "அகிலாண்ட கோடியீன்ற அன்னையே! பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயிலே!" என்பது **தாயுமானவர் பாடல்**-மலைவளர் காதலி-5. காதல் - காதலன்; மகன். **கந்தன்** – சேர்க்கப்பட்டவன்; இதனை, "........அந்தமில்லதோர் மூவிரு வடிவுமொன் றாகிக், கந்த னென்று பேர் பெற்றனன் கவுரிதன் குமரன்", "சேய வன் வடிவமாறுந் திரட்டிநீ யொன்றாச் செய்தாய்; ஆயத னாலே கந்தனுமெனும் நாமம் பெற்றான்" எனவரும் **கந்தபுராணம்**-சரவணப்படலம் 21; திருவிளையாட்டுப் படலம் 17 ஆகிய செய்யுட்களின் அடிகளாலும், "ஆறுமோ ருருவதாக ஆக்க லிற் கந்தனுன்" எனவரும் **தணிகைப்புராணம்** - சீபரி 29-ஆம் பாடல் அடியினாலும் அறியலாம்.

உமாதேவியார் செவ்விய திருமுகத்தின்கண் சேர்த்து உச்சிமோந்து மனத்தின்கண் களிகூர்ந்து திருமுலைப்பால் அளித்தாராகவின், "**செய்ய முகத்தி லணைத்து.........மகிழ்பூத் தளித்து**" என்றார்; "மலைமகள் கௌரி திருமுலை பருகு மழ விடை வருக! வருகவே!" என்பது **திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்**-வாரானைப்பருவம் 10-ஆம் பாடல் அடி.

**சகம்** - தோன்றி நின்று அழியுந் தன்மையுடையது; உல கம். சகத்தளந்த வெள்ளை விடை - மாவலிச் சக்கிரவர்த்தி யிடம் மூன்றடி மண் ஏற்று உலகத்தை அளந்த திருமாலாகிய வெண்மையையுடைய இடபவாகனம். சிவபெருமான், திரி புரத்தை அழிக்கச் செல்லும்பொருட்டுத் தேவர்களால் ஆக்கிய தேரின்மீது ஏற, உடனே அதன் அச்சு முறிந்தது; அதுகண்ட திருமால் அரனிடத்திலுள்ள அன்பு மேலீட்டினால் அப்பொ ழுதே ஒரு வெண்மையான இடப வடிவுகொண்டு எம்பெரு மானைத் தாங்கி நின்றான்; இதனை, "தடமதில்கள் அவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில் இடபமதாய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ" என்பது **திருவாசகம்** - திருச்சாழல் 15. விம லன் - பரிசுத்தன்; சிவபெருமான்.

உறையும் என்னும் பெயரெச்சம் பரஞ்சோதி என்னும் பெயரைக் கொண்டது. பகீரதிக்கே, ஏ : அசை; தேற்றமு

மாம். பகீரதிக்கு, முடிக்கு: வேற்றுமை மயக்கங்கள். காதல்: காதலன் என்பதன் கடைக்குறை.

### முருகக்கடவுளின் திருவிளையாடல்கள்

—கிள்ளைமொழி

87. மங்கை சிலம்பின் மணிஒன் பதிற்றோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்

88. விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித்(து)

89. அங்கட் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கட் கிடாயதனைச் சென்றுகொணர்ந்(து)—எங்கோன்

90. விடுக்குதிஎன்(று) உய்ப்பஅதன் மீதிவர்ந்(து)எண் டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா!—படைப்போன்

91. அகந்தை உரைப்பமறை ஆதி எழுத்தென்(று)
உகந்த பிரணவத்தின் உண்மை—புகன்றிலையால்

92. சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறைஇருத்துங் கோமானே!—மட்டவிழும்

93. பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே!—கொன்னெடுவேல்

94. தாரகனும் மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே!—சீரலைவாய்த்

95. தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்

96. கயேந்திரனுக்(கு) அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்(கு)இமையோர் வாழச்—சயேந்திரனும்

97. சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே!—காரவுணன்

98. வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்கள் நாற்படையுஞ் சங்கரித்துப்—பானுப்

99. பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய் !—சகமுடுத்த

100. வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய் !—பேராவுணன்

101. அங்கமிரு கூறாய் அடல்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும்—அங்கவற்றுள்

102. சீறுமரா வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே !—மாறிவரு

103. சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே !—மூவர்

104. குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்(டு)அளித்த தேவே !

இ - ள் : கிள்ளை மொழி மங்கை - கிளிமொழி போன்ற மொழியினையுடைய உமாதேவியாரின், சிலம்பின் மணி ஒன்பதில் தோன்றும் - (காற்) சிலம்பினின்று (சிதறிய) நவமணிகளில் தோன்றிய, துங்கம் மடவார் துயர் தீர்ந்து - சிறந்த (நவ) சத்திகளின் துன்பம் நீங்கப்பெற்று, தங்கள் விருப்பால் அளித்த - தங்கள் களிப்பினால் பெற்ற, நவ வீரருக்குள் முன்னோன் - நவவீரர்களில் முதல்வனாகிய, மரு பாயும் தார் வீரவாகு - மணம் வீசுகின்ற மலர் மாலையை (மார்பில் அணிந்த) வீரவாகு தேவர், நெருப்பில் உதித்து - (நாரத முனிவர் விரும்பி வளர்த்த வேள்வித்) தீயில் தோன்றி, அம் கண் புவனம் அனைத்தும் அழித்து - அழகிய இடமகன்ற புவனங்களையெல்லாம் அழித்து, உலவும் - திரிந்து கொண்டிருக்கின்ற, செம் கண் கிடாய் அதனை - சிவந்த கண்களையுடைய ஆட்டுக் கிடாயை, சென்று கொணர்ந்து - போய்ப் பிடித்துக்கொண்டுவந்து, எங்கோன் - எம்முடைய தலைவனே !, விடுக்குதி என்று உய்ப்ப - (இதனை

ஊர்தியாகக்கொண்டு) செலுத்தியருள்வாயாக என்று விடுக்க, அதன்மீது இவர்ந்து - அதன்மேலேறி, எண்திக்கும் நடத்தி விளையாடும் - (அதனை) எட்டுத் திசையிலும் செலுத்தி விளையாடிய, நாதா - தலைவனே!, படைப்போன் - படைத்தல் தொழிலையுடைய பிரமதேவன். அகந்தை உரைப்ப - செருக்கோடு உரையாட, (அவனை வேதங்களில் முதலிற் கூறப்படும் பிரணவத்திற்குப் பொருள் யாது என வினவ, அதற்கு அவன் தக்க விடை அளிக்க இயலாது விழிக்க), மறை ஆதி எழுத்து என்று உகந்த - வேதத்தின் முதலெழுத்து என்று (அறிஞரால்) விரும்பப்பெற்ற, பிரணவத்தின் உண்மை புகன்றிலை - பிரணவத்தின் மெய்ப்பொருளை உரைத்தாயில்லை; (ஆகையால் நீ), சிட்டித் தொழில் அதனை எங்ஙன் செய்வது என்று - படைப்புத் தொழிலை எவ்வாறு செய்தல் கூடும் என்று கூறி, முனம் - முன்னர், குட்டி சிறை இருத்தும் கோமானே - (தலையிற் குட்டி(ப் பின்) சிறையிலிடுவித்த தலைவனே!, மட்டு அவிழும் - தேன் ஒழுகப்பெற்ற, பொன் அம் கடுக்கை - பொன்போன்ற அழகிய கொன்றை மலரை (அணிந்த), புரி சடையோன் - முறுக்கிய சடையையுடைய சிவபெருமான், போற்றிசைப்ப - துதிக்க. முன்னம் பிரமம் மொழிந்தோனே - முதன்மையாகிய பிரணவப் பொருளை உரைத்தருளியவனே!, கொல் நெடு வேல் - கொல்லுதற்குக் காரணமாகிய நெடிய வேற்படையையுடைய, தாரகனும் - தாரகாசுரனும். மாயம் தடம் கிரியும் - மாயையோடு பொருந்திய பெரிய (கிரௌஞ்ச) மலையும், தூளாக - அழிந்தொழியுமாறு, வீர வடிவேல் விடுத்தோனே - கூர்மையான வெற்றி வேலை விடுத்தருளியவனே! தெள்ளு திரை கொழிக்கும் - தெளிந்த அலைகளை வீசுகின்ற, சீர் அலைவாய் - சிறந்த கடல் அருகேயுள்ள, செந்தூரில் போய்-திருச்செந்தூர்க்குச் சென்று, கருணை வெள்ளம் என - அருள் வெள்ளம் போன்று, தவிசின் வீற்றிருந்து - பீடத்து வீற்றிருந்து, வெள்ளைக் கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்து - வெள்ளை யானையையுடைய இந்திரனுக்கு அபயங் கொடுத்தருளி, கடல்சூழ் மகேந்திரத்தில் புக்கு - கடலால் சூழப்பட்ட வீரமகேந்திரபுரத்திற்குச் சென்று, இமையோர் வாழ - தேவர்கள் நல்வாழ்வு பெறுமாறு, சயேந்திரன்

ஆம்-வெற்றியையுடைய அசுரர் தலைவனாகிய, சூரனை சோதித்து வருக என்று - சூரபன்மனை (க் கண்டு தேவர்களைச் சிறைவிடு கின்றனையா அல்லது போருக்கு வருகின்றனையா என) வினாவி வருவாயாக என்று, தடம் தோள் விசய வீரனை - அகன்ற தோள்களையுடைய வெற்றி பொருந்திய வீரவாகு தேவரை, தூதாக விடுத்தோனே - தூதாக அனுப்பியவனே !, கார் அவுணன் - கரிய நிறத்தையுடைய அசுரனாகிய சூரபன்மன், வானவரை விட்டு வணங்காமையால் - தேவர்களை (ச் சிறை விடுத்து வணங்காதிருந்தமையினால், கொடிய தானவர்கள் நாற் படையும் சங்கரித்து - கொடுமை மிகுந்த அசுரர்களுடைய (தேர், யானை, குதிரை, காலாள் என்ற) நால்வகைப் படைகளை யும் அழித்து, பானுப் பகைவன் முதலாய பாலருடன் - பானு கோபன் முதலாகச் சொல்லப்பட்ட புதல்வர்களோடு, சிங்க முகனை வென்று - சிங்கமுகாசுரனையுங் கொன்று, வாகை முடித் தோய் - வெற்றி மாலையை அணிந்தவனே !, சகம் உடுத்த வாரி தனில் - உலகைச் சூழ்ந்துள்ள கடலில், புதிய மாவாய் கிடந்த - புதுமையையுடைய மாமரமாய் இருந்த, சூர் நெடும் உடலம் கீண்ட - சூரபன்மனுடைய பெரிய உடலைப் பிளந்த, சுடர் வேலோய் - ஒளி வீசுகின்ற வேற்படையை யுடையவனே !. போர் அவுணன் அங்கம் - (அவ்வாறு பிளந்ததனால்) போர்த் தொழிலில் வல்ல (அச்) சூரபன்மனுடைய உடலம், இருகூறாய் இரண்டு கூறாகி, அடல் மயிலும் சேவலும் ஆய் - (அவற்றுள் ஒரு கூறு) வலிமையுடைய மயிலும் (மற்றொரு கூறு) சேவலு மாக, துங்கமுடன் ஆர்த்து எழுந்து தோன்றுதலும்-சிறப்புடன் ஆரவாரித்து எழுந்து விளங்குதலும், அங்கு அவற்றுள் - அவ் விடத்து (விளங்கிய) அவ்விரண்டனுள், சீறும் அரவை பொருத - சீறிவரும் பாம்பைக் கொல்லுகின்ற, சித்ர மயில் - அழகையுடைய மயிலை, வாகனம் ஆ(க) ஏறி நடாத்தும் - வாகனமாகக்கொண்டு அதன்மீதேறிச் செலுத்துகின்ற, இளை யோனே - (என்றும் அழியாத) இளமையையுடையவனே ! மாறி வரு சேவல் பகையை - (உடல்) மாறுபட்டு வந்த சேவலாகிய பகைவனை, திறல் சேர் பதாகை என - வலிமை பொருந்திய பெருங்கொடியாக, மேவ - ஆக்கி, தனித்து

உயர்த்த மேலோனே - (அதனைப் பிற கொடிகளுக்கெல்லாம்) மேலாக உயர்த்திய பெரியோனே!; மூவர் குறை முடித்து - (பிரமன், திருமால், உருத்திரன் என்னும்) மும்மூர்த்திகளின் குறைகளையும் நிறைவித்து, தேவர் சிறைவிடுத்து-தேவர்களைச் சிறையினின்று விடுவித்து, விண்ணம் குடி ஏற்றி-தேவலோகத்திற்குக் குடியேற்றுவித்து, ஆட்கொண்டு அளித்த தேவே - (அனைவரையும்) அடிமையாகக் கொண்டருளிய கடவுளே! எ-று.

**விளக்கம்** : மணி ஒன்பது - நவரத்தினங்கள். மணியொன்பதிற்றோன்றும் துங்கமடவார் - நவசத்திகள்; மாணிக்கவல்லி, தரளவல்லி, புட்பராகவல்லி, கோமேதகவல்லி, வைடூரியவல்லி, வைரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, இந்திரநீலவல்லி என்போர் நவசத்திகளாவர், நவமணிகளினின்று நவசத்திகள் தோன்றினார்களென்பதை, "எண்ணி லாநவ மணிகளின் உமையுரு.........நண்ணி னார்நவ சத்திகள் அமரர்நற் றவத்தால்" எனவரும் **கந்தபுராணம்** - துணைவர்வரு படலம் 8-ஆம் செய்யுளினுலும் அறியலாம்.

உமாதேவியாரின் சிலம்பினின்று சிதறிய நவமணிகளிலிருந்து தோன்றிய நவசத்திகள், சிவபெருமானை விருப்புடன் நோக்கிக் கருப்பங்கொண்டனர். அதனை அறிந்த மலைமகள் கோபங்கொண்டு அவர்களைப் பல்காலம் கருவுயிர்க்காதிருக்கும்படி சபிக்க, அம்மாதர்கள் ஏக்கங்கொண்டார்கள். அப்போது அவர்களுடைய வடிவத்தினின்று வந்த வியர்வையினிடமாக, இலட்சம் வீரர்கள் தோன்றினார்கள். பிறகு அந்நவசக்திகள் புதல்வர்களைப் பெருது பலகாலம் துன்பமுற்று வருந்தி, அம்மையப்பரை வழிபட்டுக் கருவுயிர்க்க அருள்புரிதல் வேண்டும் என்று பிரார்த்திக்கச் சிவபெருமான் ஆஞ்ஞையால் உமாதேவியார் அம்மாதர்கள்மீது இரக்கங்கொண்டு, கருவுயிர்க்குமாறு கட்டளையிட்டனர். பின்னர், அந்நவசத்திகள் ஒன்பது புதல்வர்களைப் பெற்றார்கள். அப்புதல்வர்களே நவவீரர்கள் ஆவர் என்பார், "துங்க மடவார் துயர்தீர்ந்து தங்கள், விருப்பா லளித்தநவ வீரர்" என்றார்.

**நவவீரர்** - வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரபுரந்தரர், வீரராட்சசர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்போர். இந்நவவீரர்கள் தத்தம் தாய்மார்களின் சிறத்துடன் நான்முகனைப்போல நாபியின் வழியாக வந்து தோன்றியவர்கள் ஆவர். இதனை, "இந்த வீரரொன் பதின்மரும் ஈசன(து)" என வரும் **கந்தபுராணம்-துணைவர் வருபடலம்** 34-ஆம் செய்யுளாலும் உணர்க. **தார்** - மார்பின்மாலை. **கிடாய்**-ஆட்டுக்கிடாய். 'செங்கட் கடா' என்றும் பாடம். (கடா -ஆடு.) நாரத முனிவர் விரும்பி வளர்த்த வேள்வித் தீயினின்றும் தோன்றி மண்ணுலகத்து உயிர்களையும், விண்ணுலகத்து உயிர்களையும் அழித்துத் திரிகின்ற ஆட்டுக்கிடாய் என்பார், "**நெருப்பிலுதித்து, அங்கட் புவனம் அனைத்தும் அழித்து உலவும், செங்கட் கிடாய்**" என்றார்: "ஒருமையுள் ஒருங்கி இருகை நெய் வார்த்து, நாரதன் ஓம்பிய செந்தீக் கொடுத்த, திருகுபுரி கோட்டுத் தகர்வரு மதியோய்!" என்பவை **கல்லாடம்**-கடவுள் வாழ்த்து 2-ஆம் பாடல் அடிகள். "ஆதியெழுத்தொன்று" என்றும், "ஆதி யெழுத்தாம்" என்றும் பாடங்கள்.

வேதங்களுக்கு முதலிற் சொல்லப்படுவது பிரணவமென்னும் மந்திரம் என்பார், "**மறையாதி யெழுத்தென்று உகந்த பிரணவம்**" என்றார்: "ஓமென்று மறை பயில்வார் பிரமபுரத் துறைகின்ற, காமன்றன் உடலெரியக் கனல்சேர்ந்த கண்ணனே" என்பது **ஞானசம்பந்தர் - தேவாரம்** பிரமபுரம். **பிரணவம்** சிவபெருமானுக்கு இருப்பிடமாகவும், பிரமன் முதலிய தேவர்களுக்குப் பிறப்பிடமாகவும், வேதங்களுக்கு முதலாகவும், காசிப் பதியில் இறப்பவர்களுக்கு எம்பெருமான் உபதேசிக்கும் தாரகப் பிரமமாகவும், முருகக்கடவுள் திருமுகங்களில் ஒன்றாகவும் விளங்குவது. ஆகவே, பிரணவத்தின் உண்மைப்பொருள் சிவபெருமானும் முருகக் கடவுளுமே ஆகும். இக்கருத்துப்பற்றியே யாக காலத்து, "**சுப்பிரமண்யோம்! சுப்பிரமண்யோம்!! சுப்பிரமண்யோம்!!!**" என மும்முறை கூவி அழைக்கப்பெறும்.

**சிட்டி** - சிருஷ்டி; படைப்பு. வீரவாகு தேவரே முருகக் கடவுளின் திருவுளக் குறிப்பை உணர்ந்து பிரம தேவனது நான்கு முடிகளும் குலுங்கும்படி குட்டிச் சிறையில் வைத்த

னர் எனச் சங்கர சங்கிதை கூறுகிறது. முருகப் பெருமானின் ஆஞ்ஞை கொண்டு கணநாதர்கள் பிரமன் தலையில் குட்டிச் சிறையில் அடைத்தனர் எனத் **தணிகைப்புராணம்** புகலுகின்றது. முருகக் கடவுள் பிரமனைக் குட்டிச் சிறையிடுவித்த நிகழ்ச்சியினைக் **கந்தபுராணம்** - அயனைச் சிறைபுரி படலம் 14, 15-ஆம் செய்யுட்களால் அறியலாம். மட்டு-மணமுமாம். கடுக்கை - கொன்றைமலர். புரிசடை - கட்டுப்பட்ட சடையுமாம். பிரமம் - பிரணவ மந்திரப்பொருள். இதனை, "ஓமெனு மெழுத்திற் பிரமம் பேசிய, நான்மறை விதியை" எனவரும் **கல்லாடம்**-கடவுள் வாழ்த்து 2-ஆம் பாடல் அடிகளால் அறியலாம்.

சிவபெருமான், முருகக்கடவுளைத் தமது திருத்தொடையின்மேல் வைத்துக்கொண்டு பிரமதேவன் அறியாப் பிரணவப் பொருளை எமக்கு நீ புகலல் வேண்டும் என்று அருளியபோது, சண்முகக் கடவுள் சங்கரரை நோக்கி, "எந்தையே! தேவரீர் எனது அன்னையாருக்குப் பிறர் அறியாவண்ணம் அருளிய பிரணவப் பொருளை யாவரும் கேட்கும்படி உரைக்கலாமோ" என, எம்பெருமான் புன்னகைகொண்டு, "மைந்த! எமக்கு மறைவாகவே உரைக்கக் கடவை" என்று திருச்செவி சாய்க்க. குமரவேள் குடிலை என்னும் பிரணவப் பொருளை அருளிச்செய்தனர் என்பார், "**கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமம் மொழிந்தோனே**" என்றார்; இந்நிகழ்ச்சியினைக் **கந்தபுராணம்** - அயனைச் சிறைநீக்கு படலம் 37, 38, 39-ஆம் செய்யுட்களால் அறியலாம்.

கொல் நெடுவேல் - கொற்றொழிலமைந்த நெடுவேல் எனினுமாம். கொன் நெடு வேல் எனப் பிரித்துப் பகைவர்க்கு அச்சத்தைத் தரும் நெடுவேல் என்றும் பொருள் கூறுவர். (கொன் - அச்சம்.) தாரகனும் மாயத் தடங்கிரியுந் தூளாக - தாரகனும் அழிய, விசாலமான கிரௌஞ்ச மலையும் பொடியாக எனினுமாம். **தாரகன்** - தாரகாசுரன்; இவன், கிரௌஞ்ச மலையின் பக்கத்துள்ள மாயாபுரி என்னும் நகரில் அவுணர் சேனையுடன் வசித்து வந்தவன்; காசியபனுக்கு மாயையிடத்துப் பிறந்தவன்; சூரபன்மனுக்கும் சிங்கமுகனுக்கும்

தம்பி; யானைமுகமுடையவன்; மாயையில் வல்லவன்; திருமாலின் சக்கரப்படையைப் பொன்மாலையாகக் கழுத்தில் தரித்தவன்.

மாயைத்தடங்கிரி - கிரௌஞ்சமலை. இது 'குருகுபெயர்க் குன்றம்' எனவும் கூறப்பெறும். கிரௌஞ்சன் என்னும் அசுரன் அன்றிற்பறவை வடிவுடையவன்; தாரகனுக்கு உற்ற துணைவன்; மாயைகளைப் புரிதலில் வல்லவன்; சிறந்த வலிமையுடையவன்; அகத்தியர் சாபத்தால் மலை வடிவாக விளங்கியவன். வீர வடிவேல் - வடித்தெடுத்த வீரத்தன்மை பொருந்திய வேல் எனினுமாம். முருகவேள், தாரகாசுரனையும் கிரௌஞ்ச மலையினையும் வேற்படை கொண்டு அழித்த வரலாற்றைக் கந்த புராணம் - தாரகன் வதைப்படலம் 184, 185-ஆம் செய்யுட்களால் அறியலாம்.

சீரலைவாய்த் தெள்ளுதிரை கொழிக்கும் செந்தூர்; "வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில், நெடுவேள்" என்பது புறநானூறு-55 ஆம் பாடல் அடி. "அலைவாய்ச் செருமிகு சேஎய்" என்பது அகநானூறு-266-ஆம் பாடல் அடி. சீரலைவாய்ச் செந்தூர் - திருச் சீரலைவாயாகிய செந்தூர்—திருச்செந்தூர், இது, செயந்தி நகரம், செந்தில் எனப் பெயர் கொண்டது; முருகன் படைவீட்டுத் தலம் ஆறினுள் ஒன்று; மிகச் சிறந்த தலம். இங்கே, கடலருகே வெள்ளமென இருந்து என்ற ஒருநயம் அறியத்தக்கது. வீற்றிருத்தல் - சிறப்போடிருத்தல். கயம் - யானை. அஞ்சல் — அபயம்.

மயேந்திரம் - வீரமகேந்திரபுரம்; சூரபன்மனது தலை நகரம். சயேந்திரன் — வெற்றியையுடைய அசுரர் தலைவன்: சூரபன்மன்; சயம்-வெற்றி; ஈண்டு இந்திரன் என்பது தலைவன் என்னும் பொருள் குறித்து நின்றது; மிருகேந்திரன் என்புழிப்போல, சூரன் - சூர பன்மன்; சூரபதுமன். இவன், 'சூரன்' 'பதுமன்' என்னும் இரண்டு பெயர்களையுடைய ஒரு பெரிய வடிவினைப் பெற்றவன்; (இவனை நக்கீரர் - திருமுருகாற்றுப்படை 57 - ஆம் அடியில், "இருபேருருவின் ஒருபேர் யாக்கை" யினன் என்பர்.) காசியபனுக்கு மாயையிடத்துப் பிறந்தவருள் மூத்தவன்; பல

வரங்களைப் பெற்று ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டுயுகம் ஆண்டவன்; இந்திரனுக்கு மிகுந்த துன்பஞ் செய்தவன்; சயந்தனாதி தேவர்களைச் சிறையிட்டவன்; மிக்க வலிமையுடையவன். சோதித்தல் - வினவுதல்.

**பானுப்பகைவன்** - பானுகோபன்; இவன் சூரபன்மனுக்குப் பதுமகோமளை யிடத்துப் பிறந்த மூத்த குமாரன்; குழந்தைப் பருவத்தில் தொட்டிலில் கிடக்கும்போது சூரியனுடைய கிரணங்கள் நுழைவாயிலின் வழியாக வந்து உடலின் மேற்பட்டன என்று கோபித்துச் சூரியனைப் பிடித்துவந்து தொட்டிலில் கட்டிவைத்தவன்; ஆதலால் பானுகோபன் என்னும் பெயர் பெற்றவன்; (பானு-சூரியன். கோபன் - காய்ந்தவன்;) மிகுந்த பேராற்றலுடையவன்; தேவர்களுக்குப் பெருந் துன்பம் இழைத்தவன்.

பானுகோபன், அக்கினிமுகன், வச்சிரவாகு, மூவாயிரவர் முதலிய சூரபன்மனின் புதல்வர்களைக் குறிக்கவே, "**பானுப் பகைவன் முதலாய பாலர்**" என்றார். **சிங்கமுகன்** - ஆயிரஞ் சிங்கத் தலைகளையும் இரண்டாயிரங் கைகளையும் உடைய அசுரன், இவன், காசியபனுக்கு மாயையிடத்துப் பிறந்த இரண்டாம் புதல்வன்; சூரபன்மன் தம்பி; தாரகனுக்குத் தமையன்; ஆசுரபுரியைத் தலைநகராகக் கொண்டவன்; தேவர்களுக்குத் துன்பம் செய்து வந்தவன்; மிக்க வலிமை படைத்தவன்.

சூரபன்மன் கடல் நடுவில் தீயினைப்போன்ற செந்தளிர்களைப் பெற்றுப் பொன்னிறமான பூங்கொத்துக்களை ஈன்று, மரகதம் போன்ற காய்களைக்கொண்டு, செந்நிற மணிபோன்ற பழங்களைக் காட்டிக் கார்மேகம் போன்ற கிளைகளை விட்டுக் கொண்டு பெரிய மாமரமாக நின்றான் என்பார், "**சகமுடுத்த. வாரிதனிற் புதிய மாவாய்க் கிடந்த**" என்றார். இனி, வேர்மேலும், மாவின் மற்றைய பகுதிகள் கீழுமாகச் சூரபன்மன் நின்றான் என்பது ஒரு சாரார் கொள்கை. இக்கருத்தையே ஆசிரியர் புதுமையாகக் கொண்டு, "**புதிய மாவாய்க் கிடந்த**" என்றோதினார் போலும் எனக் கொள்ளினும் பொருந்தும்: இதனை, " அகல் திரைப் பரப்பிற் சடையசைந் தலையாது, கீழினர் நின்ற மேற்

பகை மாவின், ஒருடல்இரண்டு கூறுபட விடுத்த....அரத்தநெடு வேலோய்", "மணிதிரைக் கடலுள் மாவெனக் கவிழ்ந்த, கள வுடல் பிளந்த வொளிகெழு திருவேல்", "பெருங்கள இணர்தந் தலைகீழ்க்கீழ் குலவிய, விடமாகக் கொன்ற நெடுவேற் குளவன்" எனவரும் கல்லாடச் செய்யுட்களின் அடிகளால் உணரலாம்.

முருகக் கடவுளின் வேலாயுதம் சூரபன்மனுடைய உடலை இருபிளவாக்கிற்று. அவ்விருபிளவும் கோழியும் மயிலுமாக உருக்கொண்டு ஆரவாரித்து வர, அதனைக்கண்ட முருகக் கடவுள் மயிலைத் தனக்கு ஊர்தியாக ஆக்கிக்கொண்டார் என்பதைக் கந்த புராணம் - சூரபன்மன் வதைப்படலம் 492, 499-ஆம் செய்யுட்களால் அறியலாம்.

இளையோன் - (என்றும் அழியாத) இளமையை யுடையவன்: இதனை, 'என்றும் அழியாத இளமைக்கார' எனவரும் திருப்புகழ் அடியினுலும், "என்றும், இளையாய்; அழகியாய்" எனவரும் திருமுருகாற்றுப்படை வெண்பா அடியினுலும் அறிக. பகைவனுகிய சூரபன்மனே சேவலுருவம் எடுத்து வந்தமையின், 'சேவற் பகை' என்றூர். பிற கொடிகளெல்லாம் தனக்குத் தாழ்ந்து நிற்ப, அவற்றிற்கெல்லாம் மேலாக உயர்த்திய கொடி என்பார், 'தனித்துயர்த்த' என்றூர். முருகக்கடவுள், தன் வேலால் பிளவுபட்ட சூரபன்மனின் உடற்கூற்றில் ஒன்ருகிய சேவலைத் தனக்குக் கொடியாகக் கொண்டருளினுர் என்பதைக் கந்த புராணம் - சூரபன்மன் வதைப்படலம் 497, 498- ஆம் செய்யுட்களால் உணரலாம்.

76-ஆம் கண்ணியில் 'விண்ணேர் முறைக்கு இரங்கி' எனக் கூறியதற்கேற்ப, ஈண்டு, 'மூவர் குறை முடித்து' எனக் கூறிய நயம் அறியத்தக்கது. மூவர் குறை - மும்மூர்த்திகளுக்குச் சூரபன்மனுல் ஏற்பட்ட குறைபாடுகள்.

புகன்றிலையால், ஆல்: அசை. போற்றிசைப்ப: ஒரு சொல். தெள்ளு, உ: சாரியை. கருணைவெள்ளம்: உருவகம். கய + இந்திரன் = கயேந்திரன்; சய + இந்திரன் = சயேந்திரன்; சோதித்தல் (வினவுதல்): மலை நாட்டு வழக்கு. விட்டு என்னும் வினையெச்சம் வணங்காமையால் என்பதைக் கொண்டது.

## முருகக்கடவுள் தெய்வயானை யம்மையாரையும் வள்ளி யம்மையாரையும் திருமணம் புரிதல்

—மறைமுடிவாம்

105. சைவக் கொழுந்தே ! தவக்கடலே ! வானுதவும்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே !—பொய்விரவு

106. காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு

107. கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்(து) இனிதிருந்து—மேன்மைபெறத்

108. தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே !

இ - ள்: மறை முடிவு ஆம் - வேதங்களின் முடிவாக உள்ள (உண்மைப் பொருளைத் தெரிவிக்கும்), சைவக் கொழுந்தே-சைவசமயத்தின் இளஞ்சோதியே ! தவக் கடலே-(மக்கள் செய்யும்) தவமாகிய ஆறுகளெல்லாம் சென்றடைதற்கு இடமாகிய கடலாயுள்ளவனே ! வான் உதவும் - வானுலகத்திற்குத் தலைவனாகிய இந்திரன் மகிழ்ந்தளித்த, தெய்வக் களிற்றை - தெய்வயானை யம்மையாரை, மணம் செய்தோனே - திருமணஞ் செய்து கொண்டவனே ! பொய் விரவு காமம் முனிந்த - நிலையாமையையுடைய (உலக) இச்சையைத் துறந்த, கலை முனிவன் - கலைகளை உணர்ந்த சிவமுனிவனின், கண் அருளால் - பார்வையினால் (துய்த்த) கருணையினால், வாமம் மடம் மானின் - அழகிய இளம் பருவத்தையுடைய பெண்மானின், வயிற்று உதித்து - வயிற்றில் (கருவுற்றுப்) பிறந்து, பூ மருவு கானம் குறவர் - பூக்கள் பொருந்திய கானகத்தில் வாழும் குறவர்கள், களிகூர - களிப்படையுமாறு, பூங்குயில்போல் - அழகிய குயிலைப்போல், ஏனல் புனம் இனிது காத்து இருந்து - தினைக் கொல்லையை இனிதாகக் காவல்புரிந்து, மேன்மை பெற - மேலான நிலையினையடைய, தெள்ளி தினை மாவும் - தெள்ளிய தினை மாவையும், தேனும் - தேனையும் (கலந்து), பரிந்து

அளித்த - அன்போடளித்த, வள்ளிக் கொடியை - பூங்கொடி போன்ற வள்ளி யம்மையாரை, மணந்தோனே - திருமணஞ் செய்து கொண்டவனே! எ - று.

**விளக்கம்:** சைவ சித்தாந்தம் தனிப்பட்ட பெருமையினை யுடையது என்பார், **மறை முடிவாம் சைவம்** என்றார்: "வேதாந்தத் தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம்" என்பது **சிவஞான சித்தியார்**-சுபக்கம் 267-ஆம் திருவிருத்த அடி. "ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த, ஆரா இன்ப அருங்கனி பிழிந்து, சாரங் கொண்ட சைவசித் தாந்தம்" என்பது **பண்டார மும் மணிக்கோவை 11**-ஆம்பாடல்அடிகள். வானுதவும்தெய்வக்களிறு -தெய்வயானை யம்மையார்; இங்கே களிறு என்பது யானை என்னும்பொருளில்வந்தது. திருமாலின் மூத்த புதல்வியான அமுத வல்லி, சண்முகக் கடவுளைத் திருமணஞ் செய்து கொள்ளும் பொருட்டு, இந்திரன் எதிரில் குழந்தையாகச்சென்று, "சொர்க் காதிபதியே! நான் உன்னுடன் பிறந்த உபேந்திரனுக்குப் புதல்வி; ஆதலால், தந்தையே! என்னைப் பாதுகாக்கக் கடவை" என்று கூற, இந்திரன் ஐராவதமென்னும் வெள்ளை யானையை அழைத்து, "நமது புதல்வியாகிய இக்குழந்தையை அன்புடன் வளர்த்துவரக் கடவாய்" என்று சொல்ல, ஐராவ தம் அக்குழந்தையை மனோவதி நகரத்திற்கு எடுத்துச்சென்று பாதுகாத்து வந்தது. அதுமுதல் அப்பெண் **தெய்வயானை** என்னும் பெயரைப் பெற்றனள். பின்னர் இந்திரன் தெய்வ யானையை முருகக் கடவுளுக்கு அளிக்க, அவர் திருமணஞ் செய்துகொண்டார் என்பார், "**வானுதவும் தெய்வக் களிற்றை மணஞ் செய்தோனே**" என்றார்; இதனை, "குமர நாயகன் தெய் வக் களிற்றொடுங் கூடி" எனவும், "சேணுதித்திடு தெய்வதக் களிற்றினைச் செவ்வேள், நாணினிற் கட்டி" எனவும் வரும் **கந்தபுராணம்** – தெய்வயானையம்மை திருமணப்படலம் 260, 264-ஆம் பாடல் அடிகளால் அறிக.

கலைமுனிவன் - கலைகளையுணர்ந்த முனிவன்; **சிவமுனிவன்**. மடமான் என்பதற்கேற்ப கலையாகிய முனிவன் என்றும் ஒரு பொருள் தொனித்தல் அறிக. (கலை – ஆண்மான்.) கண்ணுல்

துய்த்தல் தேவர்களுக்கு இயல்பு; "தேவர் நோக்கத்தால் நுகர்ந்தாற்போல" என்பது **சீவகசிந்தாமணி** 222-ஆம் பாடல் **நச்சினர்க்கினியர்** உரை. ஆதலின், தேவரை ஒத்த சிவமுனிவனும் அங்ஙனம் செய்தனன். ஆகவே, சிவமுனிவன் பார்வையினுல் துய்த்த கருணையினுல் மடமானின் வயிற்றில் வள்ளி யம்மையார் உதித்தார் என்பார், " **சிலைமுனிவன் கண்ணருளால் வாமமட மானின் வயிற்றுதித்து** " என்ருர்.

காக்கையால் வளர்க்கப்பெறும் குயில், பிறகு தன் இனத்தைச் சேர்வதுபோல, வள்ளியம்மையாரும் குறவர்களால் வளர்க்கப்பெற்றுப் பின்பு தமக்குரிய இடத்தைச் சேர்ந்தார் என்ற கருத்தை உள்ளடக்கி, "**பூங்குயில்போல் ஏனற் புனங்காத்து இனிதிருந்து**" என்ருர்: "கானமென் குயில்போல் வந்துமீள வுந்தன் காவலர் குலத்திடை கலந்தாள்" என்பது **வில்லிபாரதம்** - குருகுலச்சருக்கம் 106-ஆம் பாடல் அடி. பூங்குயில்போல் ஏனல் புனங்காத்து இனிது இருந்து - அழகிய குயிலின் ஒலி போன்ற குரலினுல் (தினைப் பயிரைத் தின்னவரும் பறவைகளை ஓட்டித்) தினைப்புனத்தை நன்ருகப் பாதுகாத்திருந்து என்று பொருள் கூறினுமாம்.

தவக்கடல்: உருவிகம், கொழுந்தே, கடலே, செய் தோனே, மணந்தோனே : விளிகள்.

### முருகக்கடவுள் அன்பர் மனத்திலும், செந்திப்பதியிலும் எழுந்தருளியிருத்தல்

— உள்ளமுவந்(து)

109. ஆறு திருப்பதிகண்(டு) ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே!—நாறுமலர்க்

110. கந்திப் பொதும்பர்எழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்குஞ் செவ்வேளே!

**இ - ள்:** உள்ளம் உவந்து - மனமகிழ்ந்து, ஆறு திருப்பதி கண்டு - (தெய்வத் தன்மை வாய்ந்த) ஆறு திருப்பதிகளையும் தரிசித்து, ஆறு எழுத்தும் - ஆறெழுத்தையும், அன்பினுடன் -

அன்போடு, கூறும் அவர் - ஓதுகின்றவர்களின், சிந்தை குடி கொண்டோனே-உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டவனே! நாறு மலர் கந்திப் பொதும்பர் - மணம் வீசுகின்ற மலர்களை யுடைய கமுகஞ் சோலை, எழு கார் - எழுகின்ற மேகத்தை, அலைக்கும் - அலைக்கின்ற, சீர் அலை வாய் - சிறப்புடைய கடற் கரை இடத்தேயுள்ள, செந்திப் பதி புரக்கும் - திருச்செந்தூரைப் பாதுகாக்கின்ற, செவ்வேளே - முருகக் கடவுளே!

**விளக்கம்** : உள்ளம் - உள்ளுதற்குக் கருவியாய் இருப்பது; மனம். **ஆறு திருப்பதி** - திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்பன; இஃது **ஆறு** முக்கிய இடங்களாகும். (திருவாவினன்குடி - இது பழனிமலை அடிவாரம். திருவேரகம் - இது கும்பகோணத்தை அடுத்த சுவாமி மலை; மலை நாட்டிலுள்ள உடுப்பி என்னும் ஊருமாம். பழமுதிர்சோலை - இது அழகர் மலை. **ஆறு எழுத்து**-'சரவணபவ' என்னும் மந்திரம். நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப் படை 186-ஆம் அடியில் 'ஆறெழுத்து' என்பதற்கு '**நமோ குமாராய**' என்று பொருள் கூறியுள்ளார்; இது, "நாதா! குமரா நம என்று அரனார், ஓதாய் என ஓதியது" (**கந்தரநுபூதி** -36ஆம் பாடல் அடிகள்) ஆகும். இதன் பெருமையினை,

"ஆறிரு தடந்தோள் அண்ணல் ஆறெழுத் தினையும் ஓதில்
வேறொரு பிணிபோம் என்கை வியப்பதோ? பிறவி என்னும்
மாறரும் மறுதி நோயும் மாறிவே தாக மங்கள்
கூறரும் இன்ப வீட்டிற் குடிபுகுந்(து) இருப்பர் அன்றே"

எனவரும் **சீகாளத்திப்புராணம்** - நக்கீரச் சருக்கம் 113ஆம் பாடலால் அறியலாம்.

கந்தி - கமுகு; பாக்குமரம். பொதும்பர் - சோலை. **எழு கார்** - ஏழு மேகங்களுமாம்; அவை சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீல வருணம் என்பன. மேகமண்டலம் வரையும் கமுகஞ் சோலைகள் உயர்ந்திருந்தன என்பார், '**கந்திப் பொதும்பர் எழுகார் அலைக்கும்**' என்றார். சீரலைவாய்ச் செந்திப்பதி—திருச்சீரலைவாயாகிய

திருச்செந்தூர் எனினுமாம். 'ஜயந்தி' என்பது 'செந்தி' என வந்தது என்பர். 'செந்திற்பதி' என்றும் **பாடம்**. செவ்வேள்—செந்நிறமுடைய முருகவேள். வேள் - அழகு.

போதும்பர்: ஈற்றுப் போலி, செம்மை+வேள்=செவ்வேள்.

### அன்பரின் வேண்டுகோள்

—சந்ததமும்

111. பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி

112. பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையும்—நீதகலா

113. வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம்வந்(து) எம்மை எதிர்ந்தாலும்-அவ்விடத்திற்

114. பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும்—கச்சைத்

115. திருவரையும் சீறடியுஞ் செங்கையும் ஈரா(று)
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும்—விரிகிரணம்

116. சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற—வந்திடுக்கண்

117. எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமுந் தந்துபுகுந்(து)
உல்லாச மாக உளத்திருந்து—பல்விதமாம்

118. ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை

119. எழுத்துமுத லாம்ஐந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்(து) ஒழுக்கமுடன்

120. இம்மைப் பிறப்பில் இருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்-தம்மைவிடுக்(து)

121. ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய

122. கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்னின்(று) அருள்.

**இ - ள்:** சந்ததமும்—எப்பொழுதும், பல்கோடி சன்ம பகையும்—எண்ணிறந்த பிறவிகளில் செய்த தீவினைகளும், அவமிருத்தும்—அகால மரணமும், பல் கோடி விக்கினமும்—எண்ணிறந்த இடையூறுகளும், பல் பிணியும்—பலவகைப்பட்ட நோய்களும், பல் கோடி பாதகமும்—எண்ணற்ற பாதகங்களும், செய்வினையும்—(பிறரால்) செய்யப்படுகின்ற சூனியம் முதலியனவும், பாம்பும்—பாம்புகளும், பசாசும்—பேய்களும், அடல் பூதமும்—வலிமையுடைய பூதங்களும் தீ நீரும்—தீயும் நீரும், பொரு படையும்—தாக்கும் ஆயுதங்களும், தீது அகலா வெவ்விடமும்—தீக்குணத்தை நீக்காத கொடிய விடமும், துட்ட மிருகம் முதலாம் எவையும் - கொடிய விலங்குகள் முதலாகிய யாவும், எவ்விடம் வந்து - எவ்விடத்தில் வந்து, எம்மை எதிர்ந்தாலும் - எம்மைத் தாக்கினாலும், அவ்விடத்தில் - அந்த இடத்தில். பச்சை மயில் வாகனமும் - பசுமை நிறத்தையுடைய மயில் வாகனமும், திண் - வலிமையுள்ள, பன்னிரண்டு தோளும் - பன்னிரண்டு தோள்களும், அச்சம் அகற்றும் - (தன்னை அன்போடு நினைக்கின்றவர்களின்) அச்சத்தைப் போக்குகின்ற, அயில் வேலும்-கூர்மையுடைய வேலாயுதமும், கச்சை திரு அரையும் - கச்சையணிந்த அழகிய இடையும், சீறடியும் - சிறிய திருப்பாதங்களும், செம் கையும்—சிவந்த (பன்னிரண்டு) கைகளும், அருள்— கருணையைப் பொழிகின்ற, ஈராறு விழியும் - பன்னிரண்டு (திருக்) கண்களும், மா முகங்கள் ஆறும் - சிறந்த திருமுகங்கள் ஆறும், விரி கிரணம் - பரவுகின்ற கிரணங்களை, சிந்த - வீசுமாறு, புனைந்த - அணிந்த, திருமுடிகள் ஓர் ஆறும் - திருமுடிகள் ஆறும், எந்த திசையும் எதிர்தோன்ற வந்து - எந்தத் திக்குகளில் நோக்கினாலும் எதிரே காணுமாறு வந்தருளி, இடுக்கண் எல்லாம் - துன்பங்களை யெல்லாம், பொடி படுத்தி - தூளாக்கி யொழித்து,

எவ்வரமும் தந்து - (எனக்கு வேண்டும்) எல்லா வரங்களையும் தந்தருளி, உளத்து புகுந்து உல்லாசமாக இருந்து - (எனது) மனத்துட் புகுந்து மகிழ்ச்சியாக வீற்றிருந்து, பல் விதம் ஆம் - பலவகையாகப் பாடப்படுகின்ற, ஆசு முதல் நால் கவியும்-ஆசு கவி முதலாகிய நாற்கவிகளும், அட்டாவதானமும் - ஒரே காலத்தில் எட்டு வகை வினாக்களுக்கு விடை அளிக்கும் கவன சக்தியும், சீர் - சிறப்போடு, பேசும் இயல் - பேசப்படுகின்ற இலக்கண அமைதியுடைய, பல் காப்பியத் தொகையும் - பல காவியங்களின் தொகுதியும், ஓசை - ஒலியையுடைய, எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் - எழுத்து முதலாகச் சொல்லப் படுகின்ற ஐந்து இலக்கணங்களிலும், தோய்ந்து - படிந்து, பழுத்த தமிழ்ப் புலமை - முதிர்ந்த தமிழ்ப் புலமையும், ஒழுக்கமுடன் - நல்லொழுக்கமும், பாலித்து - தந்தருளி, இம்மை பிறப்பில் - இப் பிறப்பில் (உண்டாகும்), இரு வாதனை அகற்றி - அகப்பற்றும் புறப்பற்றுமாகிய இருவகைப் பற்றுக் களையும் போக்கி, பெரு - பெரிதாகிய, மும்மை மலங்கள் - ஆணவம் மாயை கன்மமென்னும் மும்மலங்களையும், மோசித்து - நீக்கி, தம்மை விடுத்து - (தமது) ஆன்ம போதத்தை ஒழித்து, ஆயும் - (அருள் வழி நின்று இறைவன் உண்மையை) ஆராய்கின்ற, பழைய அடியாருடன் கூட்டி - பழைய அடியார் களின் கூட்டத்தில் (என்னையும்) சேர்த்து, தோயும் பர போகம் துய்ப்பித்து - (அவ்வடியார்கள்) அனுபவிக்கின்ற பேரின்பத்தை (நானும்) அனுபவிக்கச் செய்து, சேய-சிவந்த, கடி ஏற்கும் - மணம் பொருந்திய பூங்கமலம் கால் காட்டி - அழகிய தாமரை மலர்போன்ற திருவடி (தரிசனம்) தந்து, ஆட்கொண்டு - ஆட்கொண்டருளி, அடியேற்கு முன்னின்று அருள் - அடியேனுக்கு (எப்பொழுதும்) முன்னின்று அருள் செய்வாயாக எ - று.

**விளக்கம்:** பல்கோடி-எண்ணிறந்த என்னும் பொருள் குறிக்குஞ் சொல். பாதகம்-மகாபாதகம், அதிபாதகம், உபபாதகம் முதலியன. செய்வினை-ஏவலுமாம். எம்மை என்றது அடியார்களையும் உளப்படுத்தியதாகும். இடுக்கண் - துன்பம். உல்லாசம்-மகிழ்ச்சி. ஆசுமுதல் நாற்கவி - ஆசுகவி,

மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்னும் நால்வகையான கவி. **ஆசுகவி** - ஒருவன் கருத்துக்கு ஏற்ப உடனே செய்யுள் பாடுதல். **மதுரகவி** - இனிமை மிக்க க்விபாடுதல். **சித்திரகவி** - சித்திரத்தில் அடைத்தற்குரிய செய்யுள் பாடுதல். **வித்தாரகவி** –விரிந்த காவியம் பாடுதல். "நாற்கவியும் பாடும் பணியிற் பணித்தருள்வாய்" என்பது சகலகலா வல்லி மாலை 2-ஆம் பாடல் அடி.

**அவதானம்**–ஒரேசமயத்தில் பலவகைத்துறைகளில் கருத்தைச் செலுத்துதல்; ஞாபகசக்தி. அட்டாவதானம் என்றதனால் தசாவதானமும், சோடசாவதானமும் கொள்க. இயல் - இலக்கணம். எழுத்து முதலாம் ஐந்து இலக்கணம்-எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணம். புலம்–அறிவு. புலமை – அறிவாந்தன்மை. ஒழுக்கமில்லாவிடத்துக் கல்வியாற் பயனின்மையின், '**ஒழுக்கமுடன் பாலித்து**, என்றார். ஒழுக்க மில்லாத கல்வி யாதும் பயனில்லை; "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்பது **திருக்குறள்** - பொருட்பால் - கல்வி 1.

இருவாதனை–அகப்பற்று, புறப்பற்று என்னும் இருவகைப் பற்றுக்கள். **அகப்பற்று** – யான் என்பது. **புறப்பற்று** – எனது என்பது. ஆன்ம வறிவைச் சிறுமைப்படுத்தலின், "**பெருமலங்கள்**" என்றார். பழைய அடியார் – தொன்று தொட்டு அடிமைத் திறம் பூண்டு நிற்போர். சேய – நண்ணுதற்கரிய எனினுமாம். சேய்மை–தூரம். கடி–மணம். தோன்றாத் துணையாக உபகரிக்கின்ற இறைவனைக் கண்கூடாக வந்து அருளும்படி குறையிரந்துவேண்டுவார், "முன்னின்று அருள்" என்றார்; "வையமுன்னே வந்து நல்காய் வலிவல மேயவனே" என்பது **ஞானசம்பந்தர் - தேவாரம்.**

எந்த ; எகரவினா திரிந்து வந்தது ; உலக வழக்குச்சொல். பல+கோடி=பல்கோடி. பல+பிணி=பல்பிணி. சிறுமை+அடி=சீறடி.

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

மூலமும் உரையும்

முற்றிற்று.

உ

செந்திலாண்டவன் துணை

### ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

# சகலகலா வல்லி மாலை

[மூலமும் உரையும்]

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ?சக மேழுமளித்
துண்டா னுறங்க ஒழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

பொழிப்பு: (கீழும் மேலுமான இருவகைப்பட்ட) ஏழுலகங்களையும் பாதுகாத்து இறுதியில் அந்த உலகங்களையெல்லாம் உண்டு (தன் வயிற்றில்) அடக்கியவனாகிய திருமால் திருப்பாற்கடலிலே பள்ளிகொள்ளவும், யாவற்றையும் அழித்தவனாகிய உருத்திரன் பித்துக்கொள்ளவும், படைத்தல் தொழில் ஒன்றினையே கைக்கொண்டவனாகிய பிரமதேவன் சுவையுள்ள பொருளாகக் கொள்ளுகின்ற கரும்பு போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! உன் திருவடியைத் தாங்குவதற்கு வெண்டாமரை மலருக்கு அன்றி, எனது மாசற்ற மனமாகிய குளிர்ந்த தாமரை மலருக்குத் தகுதி ஆகாதோ? (ஆகும்; ஆதலின் நீ என் மனத்தில் எழுந்தருளி அருள் செய்வாயாக).

Sarasvathi, Goddess of all Learning! While the Lord of Preservation is asleep and the Lord of Dissolution has gone crazy the Lord of Creation is happy in you, his sweet consort. Your abode is the white lotus. But can You not condescend to rest your feet on the cool lotus of my simple heart?

सकल ज्ञान की अधिष्ठात्री देवी, सरस्वती! सप्तलोक के रक्षक भगवान विष्णु सो रहे हैं, संहारक भगवान रुद्र उन्मत्त हो रहे हैं, फिर सृष्टिकर्ता भगवान ब्रह्मा आपके मधुर समागम में आनन्दित हो रहे हैं। तुम्हारा निवास स्थान केवल श्वेत कमल है? क्या तुम अपने चरण मेरे निर्मल हृदय रूपी कमल पर विराजमान करने की कृपा नहीं कर सकती? 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்;பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே!

**பொழிப்பு:** *வெண்டாமரையாகிய ஆதனத்தில் எழுந்தருளியிருக்கின்ற அழகிய பசுங்கொடி போன்றவளே! பருத்த தனங்களாகிய மலைகளையும் ஐந்து வகையாக முடிக்கப் பெறும் கூந்தலாகிய காட்டையும் சுமக்கின்ற கரும்பு போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! அறிவுடையோர்களால் விரும்பப்படுகின்ற பொருட் சுவையும் சொற் சுவையும் பொருந்த ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்ற நால்வகைக் கவிகளையும் பாடுகின்ற தொழிலில் (அடியவன் மிகத்திறமை அடையும்படி) நீ கட்டளையிட்டருள்வாயாக.*

Sweet Goddess of all Learning! Goddess of beautiful breasts and five moded hair! Goddess of slender golden figure who rests in the lotus throne! May You graciously make me sing songs in the four metres, songs with beautiful ideas, couched in sweet language.

भगवती सरस्वती देवी ! तुम उन्नत स्तन-वाली तथा पंच वेणियों को धारण करनेवाली हो। तुम्हारी कोमल सुवर्णमयी मूर्ति सर्वदा कमलासन में शोभायमान रहती है। तुम्हारी मेरे ऊपर ऐसी कृपा हो कि मैं सुन्दर भावमय मधुरभाषा में चतुर्विध काव्य द्वारा तुम्हारे गुणगान कर सकूँ ॥ 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோ?உளம் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே!
சகல கலாவல்லியே!

பொழிப்பு: *மனத்தில் ஆராய்ந்துகொண்டு (பிறர்க்குத் தாம் அறிந்த நுண்பொருளை) மிகத் தெளிவுபடக் கூறுகின்ற நூலறிவினையுடைய புலவர்களாகிய மேகங்கள் கவியாகிய மழையினைப் பொழியக்கண்டு மகிழ்கின்ற தோகையினை யுடைய மயிலின் சாயல் போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! (உன்னால்) அருளப் பெறுகின்ற வளம் மிகுந்த தமிழாகிய தெளிந்த அமுதத்தை மிக உண்டு, உனது திரு வருளாகிய கடலில் மூழ்குவதற்கு (அடியேனுக்கு) எப்பொழுது கைகூடும்? (நீ அருள் புரிவாயாக.)*

Goddess of all Learning! The Peacock dances in ecstasy on the approach of showers. So also You rejoice when poets rain showers of song of deep thinking and clear expression. When shall I experience the beauty of Tamil, the crystalline nectar that You can bestow? When shall I immerse myself in the ocean of Your Grace?

मातेश्वरी सरस्वती देवी ! मयूर मेघवर्षा होने पर आनन्दित होकर नाचने लगते हैं। उसी प्रकार तुम भी आनन्द से परिपूर्ण हो

जाती हो, जब कवि गहरे भावों से परिपूर्ण होकर स्पष्ट भाषा में तुम्हारे गुणगान करते हैं। मेरा ऐसा सौभाग्य कब होगा जब मैं तमिल भाषा के सौन्दर्यपूर्ण निर्मल अनुभवामृत का पान करूँगा और मैं तुम्हारी कृपा के समुद्र में गोते लगाऊंगा ॥ 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்;வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே!

பொழிப்பு: வட நூலாகிய கடலும், சுவை நிறைந்த வளமுள்ள தமிழ் நூலாகிய செல்வமும், (நின்னுடைய) அன்பர்களின் செவ்விய நாவில் நிலைத்திருக்கும்படி பாதுகாக்கும் கருணைக் கடல் போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! ஆராய்தற்குரிய தமிழ் நூல்களின் (அகப்பொருள், புறப்பொருள் என்ற) பாகுபாடுகளிலே படிந்த செயற்கை அறிவும், சொற்சுவை பொருந்தும்படி (கவி யியற்றும்) இயற்கை அறிவும் மேன்மேலும் உண்டாகுமாறு (நீ அடியேனுக்குக்) கட்டளையிட்டருளுவாயாக.

Goddess of all learning! Ocean of Mercy! You rest on the graceful tongues (lips) of poets and preserve the sea of Sanskrit scholarship and the rich heritage of Tamil songs. May You grant that I become proficient in the deep and varied branches of Learning! May You grant me the gift of singing felicitous songs!

दया की महोदधि सरस्वती देवी! तुम सर्वदा कवियों के ओष्ठों पर विराजमान होकर संस्कृत तथा तमिल भाषाओं के साहित्य समुद्र की सुरक्षा करती हो। तुम्हारी मुझ पर ऐसी दया हो कि मैं समग्र

विद्या के विभागों में संपूर्ण योग्यता प्राप्त कर लूँ। और भावपूर्ण मधुरभाषा में कविता भी बना सकूँ ॥ 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னே?நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள் ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்!
சகல கலாவல்லியே!

**பொழிப்பு:** *(நீர் மிகுதியினுள்) மிகவுயர்ந்த தண்டினையுடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னப்பறவையின் வடிவம் எழுதிய கொடியை உயர்த்திப்பிடித்தவனுகிய பிரம தேவனது செவ்விய நாவிலும் (அவனுடைய) மனத்திலும் வெண்டாமரை மலராகிய ஆசனத்தை நிகர்க்கும்படி எழுந்தருளியவளே! சகல கலைகளிலும் வல்லவளே! செம்பஞ்சுக் குழம்பு பூசப்பெற்ற (அன்பர்களுக்கு) நன்மையைத் தருகின்ற சிவந்த அழகிய (உன்) திருவடித் தாமரை மலர் என் மனமாகிய தடாகத்தில் மலராததற்குக் காரணம் என்ன? (அடியேனுக்கு அறிவித்து அருள்புரிவாயாக.)*

Goddess of all Learning! You rest, as on the lotus throne, on the tongue (lips) and the heart of Brahma, the Creator whose banner depicts the Swan which rests on the lotus with the long stalk. Your beautiful soft lotus feet are painted with rouge. Cannot those lotus feet bloom in the cool waters of my heart?

कमलासनभामिनी सरस्वती देवी! तुम सर्वदा उस जगत्कर्ता ब्रह्मा की वाणी और हृदय में वास करती हो, जिस का ध्वज लम्बे मृणाल युक्त कमल पर विराजित हंस से युक्त है। तुम्हारे सुन्दर कोमल चरण कमल सिन्दूर से मंडित रहते हैं। क्या वे चरण कमल मेरे हृदय के शीतल तड़ाग में नहीं सिल सकते? 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
  தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
  காய்;எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
  கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
  சகல கலாவல்லியே!

**பொழிப்பு:** *வேதப் பொருளிலும், ஆகாயத்திலும், பூமியிலும், நீரிலும், கொடிய நெருப்பிலும், காற்றிலும், அன்பர்களுடைய நேத்திரத்திலும், எண்ணத்திலும் நிறைந்து நிற்கின்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! இசைத் தமிழும், நாடகத் தமிழும், இயற்றமிழும் இனிய சொற்களால் அமைந்த கவிகளும் அடியவன் விரும்புங்காலத்து எளிதில் அடையுமாறு நீ அருள் செய்வாயாக.*

Goddess of all Learning! You pervade everything: You pervade the Vedas, the five elements, namely, ether, air, fire, water and the earth; You fill the vision and the hearts of Your devotees. Grant me this boon; make me proficient in all the arts whenever I wish. Make me proficient in music, in dance, in learning and in singing sweet poems.

सर्वव्यापिनी सरस्वती देवी! तुम वेदों में व्याप्त हो। तुम पृथ्वी, जल, अग्नि, वायु और आकाश में फैली हुई हो। तुम अपने भक्तों के हृदयों और नयनों को परिपूरण करती हो। मुझे भी यह वरदान दो कि मैं जब इच्छा करूँ तब सब कलाओं में परिपूर्ण हो जाऊँ। मुझे तुम गान में, नृत्य में, विद्या में और सुन्दर कविता पाठ में परिपूर्ण बनाओ॥

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய்;உளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே!

பொழிப்பு: *அன்பர் (தமது) மனத்தினுல் ஆராய்ந்து எழுதுகின்ற தமிழ் நூலாகிய இனிய பாலையும் நீரையும் (வெவ்வேருகப்) பிரித்தறியும் முறையை (உலகினர்க்கு)க் காட்டுகின்ற வெண்மையாகிய அன்னப்பெடை போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! செய்யுளையும், (அச் செய்யுளின்) கருத்தையும், அக் கருத்தினுல் பெறப்படும் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு பயனையும் என்னிடத்தில் சேர்க்கும் வண்ணம் நின் கடைக்கண் நோக்கை (அடியேனுக்கு) அருள்வாயாக.*

Goddess of all Learning! Like the white swan which separates water from milk, You also show discrimination in approving of the songs sung by poets. Grant me your benign look : vouchsafe unto me this boon that all song, meaning of song and the goal of all singing, namely, righteousness, wealth and happiness be integrated in my life.

विवेकवती सरस्वती देवी! शुभ्र हंस के समान, जैसे वह नीर और क्षीर में विवेक करता है उसी प्रकार, तुम भी कवियों की कविताओं में विवेक करती हो। तुम मुझे अपनी दया दृष्टि प्रदान करके सुरक्षित रक्खो जिससे मैं उन गानों को, उनके अर्थ को, और उनके लक्ष्यभूत पुरुषार्थों को भी अपने जविन में घटा सकूँ॥ 7

சொல்விற் பனமும் அவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்;நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே!

பொழிப்பு: எக்காலத்திலும் அழியாதபடி வழங்குகின்ற கல்வியாகிய பெருஞ் செல்வத்தின் பயன் போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! (பலர் விரும்பும்படிப் பேசும்) சொற்சாதுரியமும், அட்டாவதான சக்தியும், (பிறர்க்குக்) கல்வி கற்பிக்கவல்ல சிறந்த வல்லமையும் (அடியேனுக்கு) அளித்தருளித் தொண்டனாக்கிக் கொள்வாய்; (இவ்வாறு நீ அருள் செய்தல்) செந்தாமரை மலராகிய ஆசனத்தில் வீற்றிருக்கின்ற இலக்குமி தேவிக்கும் அரியதாகும்.

Goddess of all Learning! You are the Giver of the supreme everlasting wealth, namely the imperishable wealth of wisdom through learning. The Goddess of wealth, Lakshmi, who has her abode in the red lotus, cannot bestow this wealth. Grant me eloquence of tongue, skill of attending to many things simulta. neously, and the art of singing good songs. Grant me this boon and make me Your servant.

अविनाशी सम्पत्ति प्रदायिनी सरस्वती देवी! तुम सदा अक्षय ज्ञान - धन को देने वाली हो जो अध्ययन से प्राप्त होता है। जिस धन को रक्त-कमल-वासिनी लक्ष्मी देवी भी मुझे नहीं दे सकती। मुझे तुम वाणी का ओज दो और कविता के गान करने की शक्ति दो, और अपना चरण सेवक बनावो ॥

8

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்? நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே!

பொழிப்பு: *பூமிவரையில் தொங்குகின்ற துதிக்கையினை யுடைய சிறந்த பெண்யானையுடன் அரச அன்னமும் வெட்கப் படும்படி நடையினைப் பழகுகின்ற செந்தாமரை மலர்போன்ற திருவடியையுடையவளே! சகல கலைகளிலும் வல்லவளே! சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராக இருக்கும் உண்மை அறிவின் வடிவம் என்று கூறும்படி விளங்கும் உன்னைத் தியானிக்க வல்லவர் யாவர்? (உன்னடியார் அன்றி மற்றொரு வரும் இலர்; ஆதலால் அடியேனுக்கு அருள்செய்வாயாக.)*

Goddess of all Learning! The female elephant and the queen swan are celebrated for the beauty of their gait. But they pale into insignificance before the graceful gait of Your lotus feet You are the manifest Form of True Wisdom that pervades all word and thought. Who can comprehend You?

कमनीयगति सरस्वती देवी! हस्तिनी ओर हंसिनी गति सौन्दर्य के प्रख्यात हैं। किन्तु तुम्हारे चरण कमलों की सुन्दर चाल के सामने उनकी चाल फीकी पड़ जाती हे। तुम सत्य ज्ञान के विकसित रूप हो जो समग्र शब्दों ओर भावों में व्याप्त रहता हे। तुम्हारी अगाधता का कौन पार पा सकता हे॥ 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்;படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே!

**பொழிப்பு:** *சகல கலைகளிலும் வல்லவளே! பிரமன் முதலாகிய விண்ணுலகத்தைத் தமக்குரிய இடமாகக்கொண்ட தெய்வங்கள் பலகோடி உள்ளன எனினும் (ஆலோசித்துக்) கூறுமிடத்து உன்னைப்போல நேரே பயனைத்தரும் தெய்வம் (வேறு) இருக்கின்றதோ? (இல்லை; ஆதலால், நீ) உலகமுழுவதும் நிழற்றிய வெண்கொற்றக் குடையின்கீழ் இருந்து சிறப்புற்ற அரசரும் எனது இசைநிறைந்த பாட்டைக் கேட்டவுடன் (என்னை) வணங்கும்படி அருள்புரிவாயாக.*

Goddess of all Learning! There are myriads of gods and celestial beings like the Creator. But is there one to equal you? Grant me this boon that all monarchs, who rule over the earth, bow unto me the moment I sing my poems.

**सकल ज्ञान-विज्ञानाधीश्वरी सरस्वती देवी! ब्रह्मा की तरह संसार में अनेक देवी ओर देवता हैं। क्या उनमें एक भी तुम्हारी समानता कर सकता हे? मुझे ऐसा वर प्रदान करो कि जिस समय मैं अपनी कविताएं सुनाऊँ सारे विश्व के राजा, महाराजा, जो पृथ्वी पर शासन करते हैं, मेरे सामने झुक जावें॥** *10*

சகலகலா வல்லி மாலை—மூலமும் உரையும்
முற்றிற்று.